
53

# பூவரசு

**Poovarasu.**

புரட்டாதி-ஐப்பசி 98

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று



உள்ளே:

பூவரசு 8வது ஆண்டு நிறைவுப்போட்டிகள்!

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) — 911/09



பிரேமன் சிவசக்திக்குமரன் ஆலயம்
வருடாந்தத் திருவிழா 1998.




உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

இதழ்: 53
புரட்டாதி-ஐப்பசி 1998
Sept.-Oct. 1998

ஆசிரியர்:
*இந்துமகேஷ்*

வெளியீடு
பூவரசு கலைஇலக்கியப்பேரவை
ஜெர்மனி.

Poovarasu
Tamilische Kultur Magazin

Herausgeber:
Poovarasu
Kultur und Literatur Organization

Sinniah Maheswaran,
Otto Brenner Allee 56,
28325 Bremen,
Germany.

இனிய தமிழ் ஏடு.

*இந்துமகேஷின் இதழ்கள்....*

இராஜன் முருகவேல்
எழிலன்
சஞ்சயன்
ப. இராஜகாந்தன்
கி.கிறிஸ்ரியன்
இரசிகன்
த.பவானந்தராஜா
வீ.ஆர்.வரதராஜா
மட்டுவில் ஞானக்குமாரன்
பூனகர் ரவி
சீ.அருணாசலம்
சு.பிரசாந்தன்

## அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

வணக்கம்.

அடுத்த இதழுடன் பூவரசு தனது எட்டாவது ஆண்டுக்கான இலக்கியப்பணியை நிறைவு செய்கின்றது.

வழக்கம்போலவே ஆண்டு நிறைவினையொட்டி சிறுகதை கவிதை கட்டுரைப் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

'ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் பரிசுபெற்ற படைப்புக்கள் தவிர பிரசுரத்துக்குமட்டும் என்று தெரிவான படைப்புக்கள் என்னவாயின?' என்று பல படைப்பாளர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

இயன்றவரை ஒரு சிலவற்றை பூவரசில் வெளியிட்டிருக்கின்றோம்.

ஏனையவை...?

இப்போது பூவரசு கலை இலக்கியப்பேரவை ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளது.

அதாவது 'பூவரசு போட்டிச் சிறுகதைகள்' 'பூவரசு போட்டிக் கவிதைகள்' 'பூவரசு போட்டிக்கட்டுரைகள்' என்று 3 தலைப்புக்களிலுமான தொகுப்புக்களை பூவரசு தனது பத்தாவது ஆண்டு ஆரம்ப நாளன்று வெளியிடலாம் என்ற திட்டமே அது.

இது 2000 ஆண்டு தைத் திங்களில் வெளிவரும்.

போட்டிகளுக்கென அனுப்பப்படும் உங்கள் ஆக்கங்கள் அனைத்தும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எனவே போட்டிகளுக்கு அனுப்பப்பட்ட அல்லது அனுப்பப்போகும் உங்கள் ஆக்கங்கள்பற்றி வருந்த வேண்டாம். உங்கள் எழுத்து முயற்சிக்கு ஆதரவு தரும் பூவரசு உங்கள் எழுத்துக்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுவருகிறது.

தரமான ஆக்கங்களைத் தமிழுக்குத் தருவோம்.

'நாம்வாழத் தமிழ்வாழும்
தமிழ்வாழ நாம் வாழ்வோம்.'

தொடர்வோம்.
அன்புடன்
இந்துமகேஷ்
(ஆசிரியர் பூவரசு)

---

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

எட்டாவது ஆண்டு நிறைவு

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்!

படைப்பாளர் பெயர்.....................................................................................

புனைபெயர்..........................................................................................

வயது அல்லது பிறந்த திகதி.......................................................

முகவரி................................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

படைப்பின் தலைப்பு...............................................................................

பூவரசு எட்டாவது ஆண்டு நிறைவுப் போட்டிக்கென அனுப்பப்படும் மேற்படி தலைப்பிலான சிறுகதை, கவிதை, கட்டுரை எனது சொந்தப் படைப்பே எனவும், மொழிபெயர்ப்போ தழுவலோ அல்ல எனவும் இதுவரையில வேறெந்த வழிகளிலும் (பத்திரிகை,சஞ்சிகை,வானொலி) வெளிவராதது எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

பூவரசு கலை இலக்கியப்பேரவையின் நடுவர் குழுவினரால் தீர்மானிக்கப்படும் முடிவுகளுக்கு எனது மனப் பூர்வமான ஆதரவை நல்குகிறேன்.

இப்படிக்கு

..............................................................

(படைப்பாளர் கையொப்பம்)

..........................................

திகதி.

"உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்."

# பூவரசு

**பூவரசு எட்டாவது ஆண்டு நிறைவு**
**எங்கள் இளந்தளிர்களுக்கான போட்டிகள் !**

*இனிய தமிழ் ஏடு.*

**போட்டியில் கலந்துகொள்பவர்**

**முழுப்பெயர்**......................................................................

**பிறந்த திகதி**......................................................................

**முகவரி**......................................................................

......................................................................

......................................................................

......................................................................

**பங்குபெறும் போட்டிகள்**

..................................................

..................................................

**கட்டுரைப் போட்டியாயின்**
**தலைப்பு**......................................................................

**இவ்விண்ணப்பத்துடன் என்னால் அனுப்பிவைக்கப்படும்**
**போட்டிக்கான ஆக்கங்கள் எனது சுய முயற்சியே என**
**இத்தால் உறுதியளிக்கிறேன்.**
**பூவரசு கலை இலக்கியப் பேரவையின்**
**நடுவர்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன்.**

**அன்புள்ள**

..................................................
**(கையொப்பம்)**

..................................................
**(திகதி)**

......................................................................
**(பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம்)**

"உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

## அன்புடன் பூவரசு ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம்.

பூவரசு ஆடி ஆவணிக்கான இதழ் கிடைத்தது. நன்றி.

யாழ். நூலகக் கட்டிடமும் அதைத் துயருடன் நினைவுறும் மனிதரும் அட்டைப்படமாக வந்து கவரவில்லை என்னை — கலக்கிவிட்டது மனதை. எரிந்த நிலையில் அந்தப் புனிதமான இடத்தில் சென்று உள் நுழைந்து பார்த்துவிட்டு அந்தக் கொடிய அனுபவத்தை என் நண்பர் டாக்டர் சுகராஜனிடம் விபரித்துக் கொண்டிருந்தபோது அவர் தாம் அப்போது கடமையிலிருப்பதையும் தமக்கு எதிரே பல நோயாளிகள் அவதானித்துக்கொண்டிருப்பதையும் மறந்தவராய்க் கண்ணீர் விட்டு "என்னை உயர்த்திய ஆலயமது. அதை அழித்தவர்களும் எரிந்துதான் போவார்கள்" என்று புலம்பியதும் அடிக்கடி சுட்டுக்கொண்டிருக்கும் ஒரு தீச்சுடராகவே என்னுள் இருந்துவருகின்றது. ஆனால் அந்த அறிவாலயத்தை எரித்தமையின் பின்னணியிலிருந்த பாவியும் அதுபோலவே எரிந்துதான் மாண்டழிந்தான் என்றசெய்தியை இங்கு வந்தபின் கேள்விப்பட்டபோது அது புதுமையாகவல்ல நடக்க வேண்டியதே நடந்திருக்கிறது என்று என் உள்ளம் உறுதி செய்தது.

ஆலயங்களை அழிப்பவர்கள்,அறிவகங்களை அழிப்பவர்கள், அறிவாளிகளை அழிப்பவர்கள் பிஞ்சுகளை அழிப்பவர்கள், வாழவிழையும் இளசுகளை அழிப்பவர்கள், அப்பாவிகளை அழிப்பவர்கள் குடும்பங்களைக் குலைப்பவர்கள் என்ற கொடுமையின் சூத்திரதாரிகள் அனைவருமே ஆண்டவனின் அடிபட்டு அழியாமல் போகவேபோகார்கள் என்று சரித்திரம் சொல்லத் துவங்கியிருப்பது கண்டு சற்றே ஆறுதல் அடைந்தாலும் அவர்களழிந்ததால் அழிவுற்ற அறிவமுதங்கள் வந்து மீண்டும் நிறைந்து விடாவே என்ற ஆதங்கமே அதிகமாகத்தான் இருக்கின்றது. மனதைப் பிழியவைத்து விட்டீர்கள்.

வாசகர் சிந்தனைக்கு மருந்தளித்தமைக்கு பாராட்டுக்கள்.

நிற்க சுவிசிலிருந்து ஒரு வாசக அன்பர் எழுதிய மடல் என் கவனத்தைக் கவர்ந்ததையும் அதற்கு எனது கருத்தை வாசகன் என்ற ரீதியில் தரவிரும்புவதையும் இவ்விடத்தில் சொல்லித்தான் தீரவேண்டும்.

இருதிங்கள் ஏடாக வரும் பூவரசின் தொடர் அம்சங்களை நிறுத்தும்படி அவர் இருகாரணங்களை முன்வைத்து தமது மடலில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒன்று — அதிகமான படைப்பாளர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக.

மற்றது — பூவரசு தான் தெரிவித்தபடி போட்டிகளில் வெற்றி பெற்ற அல்லது அடுத்த இதழில் வெளிவரும் என்ற செய்தியறிவிப்பு தந்த படைப்புக்களையும் பிரசுரத்துக்கென வரும் படைப்புக்களையும் வெளியிடுவதில்லை என்பதற்காக.

இவ்விரண்டு காரணங்களையும் சரியென ஏற்க முடியாமலிருக்கிறது. காரணம் ஒரு பத்திரிகையின் வெளியீடுகளுக்காக ஒதுக்கப்படும் பக்கங்களின் அளவுக்கும் படைப்புக்களின் தரத்தின் தன்மைக்குமிடையில் தொடர்பு கிடையாது என்பதுதான். வியாபார ரீதியாக அதாவது பணம்பண்ணவென்று பரவிக்கிடக்கும் பத்திரிகைகளுக்கும் ஒரு பணிக்கான நோக்குடனே செயல்படும் பத்திரிகைகளுக்கு மிடையிலே ஒற்றுமையைவிட வேறுபாடே அதிகமாகக் காணப்படும். முதலது இனிப்பைவிற்றுப் பணம்பண்ணும் வியாபாரியென்றால் மற்றது சத்துணவு தந்து உயிர்காக்க உதவ முற்படும் தாய். தாயின் தெரிவின் நோக்கம் பிள்ளையின் பாதுகாப்பான எதிர்காலம்தான் என்பதை உணராத பிள்ளை தாயைக் கடிந்துகொண்டு முகம் சுளிப்பது இயல்பு. ஆனால் அதற்காக பிள்ளை சொல்லிவிட்டதே என்று தனது பக்குவப்பட்ட திட்டத்தைக் கைவிட்டுவிடமாட்டாள் தாய்.

சாதாரணமாக வாசித்துவிட்டு தூரவைத்துவிடும் ஏடுகளுடன் இலக்கியத்தரம் விழையும் பூவரசையும் இணைத்துவிடல் சரியென எனக்குப் படவில்லை.

பூவரசு வாசகர்கள் அவற்றை சேகரித்து வைப்பவர்களாக அதாவது நாளைய சந்திப்பில் இனங்காட்ட பத்திரப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அன்பர் உணர்ந்து குறிப்பிடும் அதன் ஆக்கத்துக்கான கஷ்டங்களை உணர்ந்ததாகப் பொருள்படும். அப்படியான தரமான வாசகர் வட்டமே பூவரசினது என்ற உத்தரவாதமிருந்தால் அது தொடரென்ன சிறுபடைப்பென்ன எதுவாயிருந்தாலும் தனது வாசகர்களுக்குச் சேரவேண்டிய செய்தியைச் சுமந்து நின்ற கடமையை அது செய்ததாக ஆகிவிடுமே.

அடிக்கடி அறிவிப்பதும் அதன் பின் அதை வெளியிடத் தவறிவிடுவதும் நிச்சயமாகத் தவிர்க்கப்படவேண்டும் என்ற அவரது கருத்து நூற்றுக்கு நூறுசரி. தயவுசெய்து இனி அவ்விடயத்தில் மிகக் கவனமெடுங்கள்.

தலையங்கமென்பது பத்திரிகையின் கொள்கையைமட்டும்தான் பிரதிபலிக்குமா? பிரதிபலிக்கவேண்டுமா? சந்தேகமாயிருக்கிறதே.

வெளிவரும் காலகட்டத்தில் எது தாக்கமான தகவலோ அதை ஆய்ந்து வாசகர்க்கேற்ப வெளியிடப்படும் கருத்தையே தலையங்கம்கொண்டிருத்தல் நல்லது.



இல்லையென்றால் விஷயமே இல்லாதவர்களும் சங்கமமைத்துக் கொள்கை விளக்கம் வழங்கிவரும் சடங்குகளுக்குள் சஞ்சிகைகளும் விழுந்துவிடும் அல்லவா?

அன்பர் தியாகராஜாவின் நோக்கம் பூவரசின் வளர்ச்சிதான் என்பதை உணர முடிகின்றது. அவரது அதே நோக்கமே பிறிதொரு வாசகனான எனதுமாகும். பூவரசை நமது ஏடு என்ற நிலையில் நின்று வளர்க்கவேண்டும். அதற்காகத்தானே பூவரசு கலை இலக்கியப்பேரவை தொடங்கப் பட்டிருக்கின்றது. அதை முன்னெடுத்துச் செல்லலாமே.

அன்புடன்
எழிலன்
(ஜெர்மனி)

அன்புடன் திரு.எழிலன் அவர்களுக்கு!

தங்கள் மடலுக்கு நன்றி.

வாசகர்களின் வரவேற்புடன் கூடவே அவர்களது மனந்திறந்த கருத்துக்களும் ஒரு சஞ்சிகையின் வளர்ச்சிக்கு பேருதவி புரிய முடியும்.

பூவரசின் ஆரம்ப காலங்களில் அதன் குறைநிறைகளை விமர்சித்து வாசகர்கள் கடிதங்கள் எழுதினார்கள்.

காலப்போக்கில் அது குறைந்துபோய்விட்டது.

வாழ்த்துக்களுடன்மட்டும் அவர்கள் நிறுத்திக்கொண்டார்கள்.

இந்நிலையில் வாசக அன்பர் திரு.தியாகராஜா அவர்களின் கடிதம் ஒரு மறுபரிசீலனைக்கு பூவரசை அழைத்துச் சென்றிருக்கிறது.

அவருக்குத் தாங்கள் அளித்துள்ள பதில்பற்றி ஏனைய வாசகர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதே.

எழுதுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

பூவரசின் குறைகள் எனத் தாங்களும் திரு.தியாகராஜா அவர்களும் சுட்டிக்காட்டியுள்ள குறைகளைத் தவிர்க்க உரிய முயற்சிகளை மேற்கொள்கிறேன்.

தொடர்வோம்.

அன்புடன்
இந்துமகேஷ்

அன்புடன் நண்பருக்கு.
வணக்கம்.

பூவரசு ஆடி ஆவணி இதழ் வரப்பெற்றேன். மகிழ்ச்சி.
அனுப்பி உதவியதற்காக நன்றி.
பூவரசு கலை இலக்கியப்பேரவை நூலகக் கண்காட்சி ஏற்பாடு செய்ததும் புலம்பெயர் மண்ணில் வெளியான — வெளிவந்து கொண்டிருக்கும் — சிற்றிதழ்களையும் பத்திரிகைகளையும் பார்வைக்கு வைத்ததும் போற்றத்தகுந்த முயற்சி ஆகும். கிடைத்த தமிழ்நாடு சிற்றிதழ்கள் சிலவற்றை காட்சிப் படுத்தியதும் மகிழ்ச்சியான விஷயம்.
பூவரசு இதழில் வெளியிடப்பட்டிருக்கும் இதழ்களின் விவரம் புலம்பெயர் நாடுகளில் தோன்றிய சிற்றிதழ்களை (அவற்றின் பெயர்களை) தெரிந்துகொள்ள உதவுகிறது.
நீங்கள் விரும்பியதுபோல் இதழாளர்களின் ஒத்துழைப்பு இன்னும் அதிகமாகக் கிட்டியிருந்தால் இந்த ஏற்பாடு மிகப் பயனுள்ளதாக அமைந்திருக்கக்கூடும்.எனினும் இவ்வளவாவது செய்யமுடிந்ததே என்று சந்தோஷப்படலாம்.
நீங்கள் மேற்கொண்ட முயற்சி வெகுவாக பாராட்டப்பட வேண்டியது ஆகும்.
யாழ்.நூலகம் குறித்த தகவல் கட்டுரை நன்று.
'குருடான கவிஞனுக்கு'கதை வாழ்க்கையின் — ஆண்பெண் இல்லறத்தின் — ஒரு தன்மையை நன்கு சித்தரிக்கின்றது.
'வானம் வசப்படும்' ரசமான சிறுகதை.
ஒரு எழுத்தாளனின் மனச் சலனத்தையும், தேர்ந்த ரசிகையான ஒரு பெண்ணின் மன உறுதியையும் நல்ல முறையில் வெளிப்படுத்துகிறது பாராட்டுக்கள்.
பூவரசு இதழின் அச்சும்அமைப்பும் இனிமையாக உள்ளன.

அன்பு
**வல்லிக்கண்ணன்**
(சென்னை,தமிழ்நாடு)



# இவர்கள்யார்?

☐சி.கமலநாதன் ☐இராஜன் முருகவேல் ☐சி.சற்குருநாதன் ☐சி.சிவதுரை
☐வே.தேவநந்தினி ☐ஜெகதீஸ்வரி இராஜரட்ணம் ☐பிலோமினா ஜோர்ஜ்.(நோர்வே)
☐செ.யோகநாதன் ☐இ.சம்பந்தன் ☐பொன். தியாகராஜா (டென்மார்க்)
☐வே. பரமசிவம் ☐க.ஸ்ரீதாஸ்(நெதர்லாந்த்) ☐உமா கதிர்காமநாதன்
☐நிர்மலாதேவி பரமசிவம். ☐புஸ்பநந்தகுமாரன் ☐செ.ஸ்ரீஸ்கந்தராஜா
☐கௌரி கணா(கனடா) ☐பீற்றர் குலம் ☐கே.மகேந்திரராஜா ☐பத்மினி பரம்(கனடா)
☐மா.தியாகேஸ்வரன் ☐பவன் கணபதிப்பிள்ளை (பிரான்ஸ்) ☐கே.என்.குணராஜன்
☐ஆர்.எஸ்.துரை (மலேசியா) ☐பொ.கருணாஹரமூர்த்தி ☐எழிலன்
☐ஜெரின் எம்.ஜோர்ஜ் (நோர்வே) ☐அ.வேணுகோபாலன் ☐சஞ்சயன்
☐முஹம்மத் எஸ்.ஆர்.நிஸ்த்தார் ☐ஜெயசித்ரா ஜெயக்குமார்(சுவிஸ்)
☐த.பவானந்தராஜா ☐இ.ஸ்ரீராம்குமார் ☐சுதர்சன் இரத்தினம்
☐இராஜேஸ்வரி சிவராஜா ☐எஸ்.நளாஜினி(சுவிஸ்) ☐அ.கணேசலிங்கம்
☐மணிகண்டன்(பிரான்ஸ்) ☐பசுபதிராஜா ☐கி.கிறிஸ்ரியன்(பிரான்ஸ்)
☐சி.ரவீந்திரன் ☐சக்திதேவி சத்தியநாதன் ☐ஜெயா நடேசன்

கடந்த ஆண்டுகளில் பூவரசு நடாத்திய போட்டிகளில் பரிசுகள்பெற்ற சிறுகதை, கவிதை, கட்டுரைகளைஎழுதிய படைப்பாளர்கள் இவர்கள். இந்த ஆண்டுக்கான சிறுகதை கவிதை கட்டுரைப் போட்டிகள் பற்றிய விபரங்கள் மறுபக்கத்தில்....

# பூவரசு

## எட்டாவது ஆண்டு நிறைவு
## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்!

### 1. சிறுகதைப்போட்டி

- ☐ சிறுகதைக்கான கருவை நீங்களே தேர்ந்துகொள்ளலாம்.
- ☐ பூவரசு இனியதமிழ் ஏட்டில் 4பக்கங்களுக்கு குறையாமலும் 8பக்கங்களுக்கு மேற்படாமலும் சிறுகதை அமையவேண்டும்

### 2. கட்டுரைப்போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத்தேர்ந்து கட்டுரைகள் வரையப்பட வேண்டும்.

1.) 2000 ஆண்டில் நாங்கள்?
2.) என்றுதணியும் எங்கள் சுதந்திரதாகம்?
3.) இளைய தலைமுறைகள்.

☐ கட்டுரைகள் பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 4முதல் 6 பக்கங்களுக்குள் அமையவேண்டும்.

### பொதுவிதிகள்:

- ☐ போட்டிகள் எதற்கும் வயதெல்லை இல்லை.
- ☐ போட்டிகளுக்கான ஆக்கங்கள் கையெழுத்தில் அல்லது தட்டச்சில் அல்லது கணணிமூலம் தாளின் ஒருபக்கத்தில் மாத்திரமே எழுதப்பட வேண்டும்.
- ☐ படைப்பாளர் தனது பெயர் முகவரி என்பவற்றை படைப்பில் குறிப்பிடக்கூடாது.
- ☐ போட்டியாளர் பூவரசுடன் இணைக்கப் பட்டிருக்கும் விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பவேண்டும்.
- ☐ போட்டிக்கென அனுப்பப்படும் ஆக்கங்கள் சுயமானதாகவும் ஏற்கனவே வேறுவகைகளில் வெளிவராததாகவும் மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இல்லாததாகவும் இருத்தல் வேண்டும்.
- ☐ பூவரசு கலை இலக்கியப் பேரவையின் நடுவர் குழுவினரின் தீர்ப்பின்படியே பரிசுக்குரியவை தேர்ந்தெடுக்கப்படும்.
- ☐ போட்டி முடிவுதிகதி எக்காரணம்கொண்டும் மாற்றப்பட மாட்டாது.

**இப்போட்டிகளுக்கான முடிவு திகதி: 15.12.1998 ஆகும்.**



---

படைப்பாளர்கள், வாசகர்களுக்காக இன்னும் ஒரு போட்டி!
55ம் பக்கத்தில்!

### 3.கவிதைப்போட்டி!

☐ பொங்கிடும் நெருஞ்சங்கள் புது உலகு படைக்கட்டும்


☐ புதுயுகம் நோக்கி இனிப் புறப்படுவோம் வாருங்கள்!

☐ விடிகின்ற பொழுதுவரை விளக்கேந்தி வாருங்கள்

☐ தாயே உனக்காக!

☐ இளைய தலைமுறையே எழுந்துவா சொல்கின்றேன்.


☐ மானல்ல தேனல்ல மலரல்ல பெண்.




**-இவைகளெல்லாம் முன்னைய ஆண்டுகளில் பூவரசு கலை,இலக்கிய விழாக்களில் பங்குபற்றிய கவியாளர்களுக்காக பூவரசு தந்த தலைப்புக்களில் ஒரு சில.**

☐ இந்தத்தலைப்புக்களில் உங்களுக்குப் பிடித்தமான ஒரு தலைப்பில் நீங்கள் கவிதை எழுதலாம்.
☐ கவிதைகள் பூவரசுஇனியதமிழ்ஏட்டில் உபக்கங்களுக்குள் அடங்கவேண்டும்.

# பல் சுவை.






கோயில்யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக்கொண்டு சுத்தமாக வந்துகொண்டிருந்ததாம்.
ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு, ஒரு பன்றி வாலையாட்டிக்கொண்டு வந்ததாம்.
யானை ஓர்ஓரத்தில் நின்று அதற்கு வழிவிட்டதாம்.
அந்தப் பன்றி எதிரே வந்த இன்னொரு பன்றியிடம் 'பார்த்தாயா அந்த யானை என்னைக்கண்டு பயந்துவிட்டது!' என்று சொல்லிச் சிரித்ததாம்.
அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை 'அப்படியா நீ பயந்துவிட்டாயா?' என்று கேட்டதாம்.
அதற்குக் கோயில்யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னதாம்.
'நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என்மேல் வீழுந்துவிடக்கூடாதே என்றே ஒதுங்கினேன். நான் ஏறி மிதித்தால் அது துவம்சமாகிவிடும். ஆனால் என் கால் அல்லவா! சேறாகிவிடும்!'

— இந்தக்கதையின்படி சிறியவர்களின் ஆணவத்தைக்கண்டு நாம் அடக்கத்தோடு ஒதுங்கிவிடுவது சிறந்தது.முன்னேற விரும்புகின்ற எவனுக்கும் ஆணவம் பெருந்தடை.

(நன்றி: இந்துசமய தத்துவங்கள் ஐநூறு.)





## ஏளனம்.

கார்மேகத்தின் துளிகள்
பூமியில் வீழ்ந்தபோது
'துளிகள்...!'என்ற
ஏளனச் சிரிப்பு
எங்கேயோ இருந்து கேட்டது.
துளிபோடு துளி சேர்ந்து
கடல் சுழன்றெழுந்தது
பயணம் செய்தன
இலக்குநோக்கி!
திக்குகள் நடுங்கின!
ஏளனமாய்ச் சிரித்த
எவரும்
அப்போது இருக்கவில்லை.

-சு.பிரசாந்தன்

## நான் இன்னும் வாழ்கிறேன்... கீறப்படாமல்.

எங்கு தீப்பிடித்தால் எனக்கு என்ன
நான் மூச்சுவிடுகிறேன்
என் வயிறு இன்னும் வற்றவில்லை
எங்கு கலவரமானாலும் எனக்கு என்ன
என் உயிர் இன்னும் என்னிடம்
என் உரிமை இன்னும் கீறப்படவில்லை.

நான் இன்னும் வாழ்கிறேன்
நான் இன்னும் நானாக
நான் நானாக
எனக்காக வாழ்கிறேன்
எனக்குத்தேவை
நான்... என் மனைவி...
என்மகள்... என்மகன்
இப்படியாக நான்
எனக்குள்ளேயே
எனக்காய்வாழ்கிறேன்

ஓட்டுக்குள் ஆமையாய்
நாங்கள் எங்களுக்குள்ளேயே
மரணித்துக்கொண்டு
மரணமில்லா பயத்தோடு

இப்போது என்ன நடந்துவிட்டது
கீறல்கள்தானே... கீறப்பட்டது
பொறுப்போம்!
தீ.....
அவன் வீட்டில்தானே...!!



சீ. அருணாசலம்
(பகாவ். மலேசியா)

படித்தேன் ரசித்தேன்
-சி.பாண்டியன்
(இந்தியா)

சித்திரம் வடித்தேன்
-ஜெ.கீர்த்தி




மலருக்கு மணம் அழகு
மயிலுக்கு மேல் அழகு
கண்ணிற்கு மை அழகு
என் கீர்த்திக்கு நான் அழகு।

முல்லை சிரிப்பு அழகு
முகத்து அழகும் கண்ணழகும்
நூல் இடையும்–என்
மனசைவிட்டுப் போகுதில்ல।

தண்ணி குடம் எடுத்து
தனிவழிய போறபெண்ணே।
தண்ணி குடத்திற்குள்ளே
தளும்புதடி என்மனசு!

சொன்னாலும் ஆகாது
சொல்லவும் கூடாது
கண்டாலே போதுமடி–என்
காதல் இன்பம் தீருமடி।

உன்னை நினைச்சாலே
எந்தனுக்கு
நினைவு தடுமாறுமடி।

பணத்திற்கு நீங்கள் தலைவனாக இருந்தால் அதை நல்ல செயல்களுக்குப் பயன்படுத்துங்கள். அதற்கு நீங்கள் அடிமையாக இருந்தால் அது உங்களைத் தீய செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும்.

-ஆப்பிரிக்கப் பழமொழி



**எப்பொழுதுமே குறைகூறுபவர்களைப் பற்றி....?**

ஓவியர் ஒருவர் ஒரு தெருச்சுவரில் ஒரு யானைபடம் வரைந்தார்.
படத்தைப் பற்றி மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஓவியர் விரும்பினார்.
'இந்தப்படத்தில் குறைகாணுகிறவர்கள் குறையுள்ள இடத்தில் ஒரு சிவப்புப்புள்ளி வைக்கவும்!' என்று படத்துக்குக் கீழே எழுதி வைத்தார்.
புள்ளிவைக்க சிவப்புவர்ணமும் ஒரு தூரிகையும் வைத்துவிட்டு வீட்டுக்குப் போனார்.
மறுநாள் காலையில் திரும்பிவந்து படத்தைப் பார்த்தார்.
படம்முழுக்க ஒரே சிவப்புப்புள்ளிகள். கோலம்போடப் புள்ளிகள் வைத்தது போல் இருந்தது. யானையே தெரியவில்லை. அவ்வளவு புள்ளிகள்.
'என்படத்தில் இத்தனை குறைகளா?' என்று ஓவியர் வருந்தினார்.
அப்பொழுது அந்த வழியே ஒரு பெரியவர் வந்தார்.
"ஏன் கவலையாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.
"நான் வரைந்த படமே தெரியாதபடி மக்கள் இத்தனை புள்ளிகள் வைத்து விட்டுப் போய்விட்டார்கள்" என்று ஓவியர் நடந்ததைச் சொன்னார்.
"அதற்கா இப்படி வருந்துகிறாய்? இன்றும் ஒரு படம் வரைந்துவை. அதற்குக்கீழே இந்தப்படத்தில் குறைகாண்பவர்கள் திருத்தவும்!" என்று எழுதிவை என்று பெரியவர் சொன்னார்.
அதேபோல் ஓவியர் மீண்டும் சுவரில் ஒரு யானைபடம் வரைந்தார்.
இந்தப்படத்தில் குறைகாண்பவர்கள் திருத்தவும் என்று எழுதிவைத்தார்.
திருத்த வசதியாக வர்ணமும் தூரிகையும் வைத்தார். பிறகு வீட்டுக்குப் போய்விட்டார்.
மறுநாள் ஓவியர் வந்தார்.
படத்தைப் பார்த்தார். படத்தில் ஒரு திருத்தமும் இல்லை.
படம் அப்படியே இருந்தது. ஓவியருக்கு ஒரே ஆச்சரியம்.
இன்றும் அந்தக் கிழவர் இந்தத் தெருப்பக்கம் வந்தார். ஓவியர் அவரை அழைத்து நடந்ததைச் சொன்னார்.
இன்று யாரும் ஒரு திருத்தமும் செய்யவில்லை என்று ஓவியர் வியப்புடன் கூறினார்.
அதற்குப் பெரியவர் சொன்னார் —
"நம் மக்கள் குறைசொல்லத் தயார். ஆனால் குறையைத் திருத்த யாருமே தயாராக இல்லை!"

**(உங்கள் சேகரின் கேள்வி-பதில் நூலிலிருந்து)**

# இரட்டைவேடம்

பேனாவைக் கையில் எடுத்ததுமே எதிரில் வந்து நிற்கும் அவள் முகம்.
எப்போதும் இப்படித்தான்.
இன்றைக்கும்...
'வேண்டாம்... எழுதுவதற்கு எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. உன்னையே சுற்றிச்சுற்றி ஓடும் என் எண்ணங்களிலிருந்து விலகி இன்றைக்காவது உருப்படியாய் ஒன்றை எழுதவிடு!'
அவளை உதறிவிட நினைக்கிற மனது.
முடிகிற காரியமாக இல்லைத்தான் அது.
என்றாலும் முயன்று...முயன்று...
மேசைமீது விரிந்து கிடந்த வெள்ளைத்தாளின் மீது பேனாவை ஓட்டுவதற்கு முன்பாக, கண்களை மெள்ள மூடி, நாற்காலியில் சற்றுத் தளர்ந்தாற்போல சரிந்து எழுத நினைத்த எண்ணங்களை வரிசைப்படுத்தி...
ஆனால் இடையூறாக நின்று சிரிக்கிற அவள் முகம்!
'என்னை ஒதுக்கிவிட்டு எழுதப் போறீங்களா...? எழுதுங்களேன்..! யார் வேண்டாம் என்றது...!'
-எனக்கும் தனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாததைப்போல் இமைதாழ்த்தி விழிகளின் ஓரத்தில் ஒரு குறும்புப் பார்வை பார்த்து, சிவந்த இதழ்களில் மலர்ந்த மெல்லிய சிரிப்புடன் அவள்!

மகாகவி பாரதியின் கனவிலும் நினைவிலும் ஒட்டிக்கொண்டிருந்த அன்னை பராசக்திமாதிரி என்னுள் இவள்....
எப்போது பேனாவைக் கையில் எடுத்தாலும் மனமேடையில் வந்துநின்று...
எத்தனை கோலங்கள் காட்டிவிட்டாள்!

..........................................................

பள்ளிப் படிப்பினிலே-மதி
பற்றிடவில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணைமேல்-அவள்
வீணையும் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதம் -கண்டேன்
வெள்ளை மனது பறிகொடுத்தேன் அம்மா!
-பாரதிக்கு பள்ளிப் படிப்பினில்...
எனக்கும் அப்படித்தான்!
இவளும் என் எழுத்தும்!

-இந்துமகேஷ்.



1.

அதிகாலையில் —
மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தரும் ஆசிரியனைப்போல் —
தன் குரலை மெருகேற்றிக் கொள்வதற்காகத் தனியாக நின்று சாதகம் செய்யும் ஒரு பாடகனைப்போல் —
பட்டிமன்றத்தில் பேசுவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் ஒரு பேச்சாளனைப்போல் —
மற்றவர்களுக்குச் சொல்லமுடியாத தன் சோகக்கதையைத் தனக்குத்தானே சத்தமிட்டுச் சொல்லித் தன்னைத்தானே தேற்றிக்கொள்ள முனையும் ஒரு அகதியைப்போல் —
அந்தப் பறவையின் குரல்மட்டும் தனியாகக் கேட்கும்.
கோடைகாலத்து இரவுநேரங்களில் படுக்கை அறை யன்னலைத் திறந்து வைத்துவிட்டே தூங்குவான் மனோ.
அதிகாலை நான்குமணிக்கெல்லாம் இருளைக் கலைத்துக்கொண்டு பரவும் வெளிச்சத்தோடு அந்தப்பறவையின் பேச்சும் பாட்டும் இவனது தூக்கத்தைக் கலைக்கும்.
விழித்துக்கொண்டே ஆனால் எழுந்திருக்காமல் படுக்கையில் கிடந்தபடியே அந்தப் பறவையின் குரலோடு கலந்துபோவான் அவன்.
சற்று நேரத்துக்கெல்லாம் தெருவில் உருளும் கார்களின் பஸ்களின் இரைச்சல்களோடு போட்டியிடமுடியாமல் அந்தப்பறவையின் குரல் அமுங்கிப் போகும்.
மறுபடியும் மறுநாள் அதிகாலை....!

அந்தப் பறவையின் குரல் ஒரு இனிய சங்கீதம்போல் இவன் இதயத்தில் இடம்பிடித்துக்கொண்டு விட்டது.
அதற்காகவே அதிகாலையில் விழிக்கப் பழகிக்கொண்டிருந்தான் அவன்.
அல்லது இவனை அது விழிக்க வைத்தது.
ஆனால் ஆச்சரியம் —
ஒருநாள்கூட இவன் அந்தப்பறவை எப்படியிருக்கும் என்பதை அறிய முனைந்ததில்லை.
அது எப்படியிருந்தால் என்ன...

இன்றைக்கு அதிகாலையிலும் அந்தப் பறவையின் குரல் கேட்டது.
ஆனால் அதற்கு முன்னதாகவே இவன் விழித்துக்கொண்டான்.
விழித்துக்கொண்டான்என்பதும் தவறு —
விழித்திருந்தான்.

இரவு முழுவதும் தூக்கமில்லை.
நாலைந்து பேராகச் சேர்ந்துகொண்டு ஏறிமிதித்தாற்போல உடலெல்லாம் விண் விண் என்று வலியெடுத்தது.
வேலைப்பளு என்றும் சொல்வதற்கில்லை.
வழக்கமாக ரெஸ்ரோரன்டில் செய்யும் எட்டுமணிநேர வேலைதான்.
வேலை முடிந்து வந்து மேல்கழுவிவிட்டு இரவு உணவு அருந்திவிட்டு படுக்கையில் சாய்ந்ததுமே தூக்கம் கண்களைக் கவ்விக்கொள்ளும்.
ஆனால் இந்த இரவு அப்படியில்லை.

தனது நேரம் தவறாமல் அந்தப்பறவை பாடத்தொடங்கியிருந்தது.
சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தான் —
அதிகாலை சரியாக நான்குமணி.
இப்போது அந்தப் பறவையின் குரலில் ஒரு சோகம் இழையோடுவதாய்ப் பட்டது அவனுக்கு.
அது இன்றைக்கு அதிகமாய்ப் பேசுவதுபோலவும் பாடுவதுபோலவும் உணர்ந்தான்.
அதன் பாடல் இடையிடையே ஒப்பாரிபோல் தொனிப்பதும் தெரிந்தது.
வழக்கம்போல் தெருச்சத்தங்கள் அதிகப்பட அந்தக் குரலும் அமுங்கிப் போயிற்று.

தொலைபேசி மணி அடித்தது.
யாராக இருக்கும் இந்த நேரத்தில்?
உடன் வேலை செய்யும் கூட்டாளிகளில் எவராகவேனும் இருக்கலாம்.
அல்லது அடுத்தடுத்த நகரங்களில் வசிக்கும் தூரத்துச் சொந்தக்காரர்கள் எவராகவேனும் இருக்கலாம்.
பதட்டமின்றி படுக்கையில் கிடந்தபடியே கையை உயர்த்தி தலைமாட்டில் இருந்த தொலைபேசியை எடுத்தான்.
"ஹலோ...!"
"ஆர்...மனோ...?"
"நான்தான்...!"
"மச்சான்...நான் சுரேன்..."
"என்னடாப்பா...விடிய வெள்ளண...?"
"ஒண்டுமில்லையடாப்பா சும்மாதான் எடுத்தன்....!" இழுத்தான்.
அவனது குரல் சற்றுத் தணிந்திருந்ததிலிருந்தே ஏதோ முக்கியமான அலுவலாய்த்தான் எடுத்திருக்கிறான் என்பது தெரிந்தது.
"சுரேனாவது சும்மா எடுக்கிறதாவது...சரி...சொல்லு...என்ன...?"
"இண்டைக்குக் காலமை கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தனான் மச்சான்... யாழ்ப்பாணத்திலையிருந்து என்ரை ஐயா வந்திருக்கிறேர்..."



"ம்...!"
"ஐயாவோடை கதைக்கிறபோதுதான் கேள்விப்பட்டனான்...!"
"என்ன...?"
சுரேன் சற்று அமைதியானான்...பிறகு மெள்ளக் கேட்டான்....
"உனக்கு இன்னும் தகவல் வரேல்லையா?"
"என்ன தகவல்...? எதைப்பற்றி...?"
"உன்ரை அம்மா இறந்ததைப் பற்றி..."
"என்னமச்சான் சொல்கிறை...என்ரை அம்மா....?!"
"ஐயாதான் சொன்னவர் மச்சான்... போனகிழமை விழுந்த ஷெல்லாலை உன்ரை அம்மாவும்...!"
மனோ அதிர்ந்தான்....
தலைக்குள் ஏதோ வெடித்துச் சிதறியதுபோல் இருந்தது.
அறைக்குள் நுழைந்திருந்த வெளிச்சம் மங்கி மறைந்தது.
இருளுக்குள் விழுந்து புவியோடு சேர்ந்து அவனும் சுழல்வதுபோல்....
"மச்சான்...யோசிக்காதை...இன்னும் கொஞ்சத்திலை நான் உங்கை வாறன்... இப்ப ஒன்பது மணி ரெயின் எடுத்தால் பின்னேரம் அங்கைவந்து சேர்ந்திடுவன்...."
— சுரேன் சொன்னவைகள் இவனது காதுகளில் விழுந்திருக்காது...
இயந்திரத்தனமாய் ரிசீவரை வைத்துவிட்டு குப்புறப்புரண்டு தலையணையில் முகம் புதைத்தான்.
"அம்மா...!"
திருமணக் கோலத்தில் கணவனின் அருகே நெருங்கி, கறுப்பு வெள்ளை நிழற்படமாய் இவனது அறைச்சுவரில் கண்ணாடிச் சட்டத்தினுள் புன்னகைத்தபடி நின்றுகொண்டிருந்தாள் இவன் அம்மா.
வெளியே அந்தப் பறவை எதற்காகவோ அலறத் தொடங்கியிருந்தது.

(தொடரும்)



# எங்குதான் செல்வாய் இனி?

**-பூனகர் ரவி.**



வடபுலத்தில் வறட்சி என்று
தென்புலத்தில் கடைவிரித்தோம்
குடைபிடித்து வரவேற்ற
தென்புலத்தான்
தடைவிதித்து கடைஉடைத்து
காடைத்தனம் புரிந்ததனால்
மடைதிறந்து வெள்ளம்போல்
வடக்குநோக்கி ஓடிவந்தோம்

உடை இழந்து வந்தோரும்
உடமை இன்றி வந்தோரும்
மொழி இழந்து வந்தோரும்
நடைப்பிணமாய் வந்தோரும்
வடபுலத்தில் அகதிகளாய்...
யாசித்துப் பெறுவதல்ல சுதந்திரம்
என்று சொல்லி
யோசித்து முடிவெடுத்தோம்
செய்து முடிப்போம் அல்லது
செத்து மடிவோம் என்று
சத்தியம் செய்துவிட்டு
கோடிப் பக்கத்தாலும்
கொல்லைப் புறத்தாலும்
சொல்லாமல் கொள்ளாமல்
மேலைத்தேசம் வந்த
மேதாவிகள் நாங்கள்
புலம்பெயர்ந்து புலம்புகின்ற
புத்தி ஜீவிகள் நாங்கள்

படிதாண்டினால் பத்தினியை
நீ ஏற்கமாட்டாய்
பதிவிரதன் நீ தாய்நாடுவிட்டு
ஓடிவிடல் ஏற்பதோ?

புறம் காக்கப் பிறந்தவனா நீ
அறம் தெரியாதவனே...
கிழக்கு வெளிக்க அசதி முறித்து
வயிறுகலக்க வடலி நுழைந்து
குந்தி இருந்து குழிவிழ நிலத்தில்
சலமது விட்டு காலைக் கடனது கழிக்க
எங்குதான் செல்வாய் இனி?

வேம்பது விரவி கொம்பது முறித்து
கச்சிதமாய் கடியது கடித்து
பல்லது விளக்கி பனிப்புல் மிதித்து
பரவசம் அடைந்து
பாடிடும் குருவியின் ஓசைகள் கேட்டு
பனை அடி மறைவில் கம்பல் உயர்த்தி
சடுதியாய் இருந்து அடிக்கவே
எங்குதான் செல்வாய் இனி?

பாதிநேரப் பள்ளியைக் கடத்தி
வாத்தியாரை வசையது பாடி
கூவில் பனங் கூடலின் கீழே
கூடி அமர்ந்து மந்திக் கூட்டமாய்
மாந்தியே கள்ளை
சீட்டி அடித்து சேட்டைகள் விட்டு
காணிகள் கடந்து கேணியை அடைந்து
கீரி மலையாள் களபம் பூசி
சாமிகோலமாய் வீடுபோகும்
சங்கதி செய்திட
எங்குதான் செல்வாய் இனி?

போர்த்திருந்த இருட்டில்
பூத்திருந்த பூவரசில்
காத்திருந்து காத்திருந்து
காதலியைக் காணாமல்
கணமெல்லாம் யுகமாக
கட்டெறும்புக் கடிவாய்க்
கால்கடுக்க நீ நின்று
கத்தி அழைத்தால்
கதைகாலி என்றெண்ணி

எட்டி இலை ஓடித்து
இங்கிதமாய் அதைமடித்து
காதலியின் பெயர் அழைத்து
காணும் இன்பம் கோடிபெற
எங்குதான் செல்வாய் இனி?

உடல் உருகும் வெப்பம்
உயிர் உருகும் உறவுகள்
மணம் பறிக்கும் மலர்கள்
மானம் காக்கும் மனிதர்கள்
மணம் நிறைந்த வாழ்க்கை
இவற்றையெல்லாம் தொலைத்துவிட்டு
அந்நியன் மண்ணில்
பணத்திற்கும் மனத்திற்கும்
வேறுபாடு தெரியாது
பணம்பண்ணும் மனநோய்
பற்றிவிட்ட உனக்கு
அகதி மனுக்கொடுக்க
அடுத்து ஒரு நாடில்லை
அந்தனை நாட்டிலும்
கைநாட்டு ஓத்தி எடுத்து
முகவரி தொலைத்து
முகத்தையும் தொலைத்து
முக்காடு போட்டு
மூலையில் நிற்கின்றாய்
எக்கேடு கெட்டாலும்
தாய்மண்ணிற்கு வித்தாவோம்!
மாவீரராய் மடிவோம்
தமிழ் தாயின் தாள்பணிவோம்
பிறப்புரிமை என்னும்
சிறப்புரிமை இழக்குமுன்பு
அங்குதான் செல்வாய் இனி!

(கம்பல்-ஆடை. களபம்-சந்தனம்)

(பூவரசு 7வது ஆண்டு நிறைவுப் போட்டியில் ஆறுதல் பரிசுபெற்றது)

# இன்னும் இயங்கும்...



வெறிச்சோடிய வீதிகள்!
துணையிழந்தபறவை?
எரிந்த வீடுகள்...
கலைந்தகனவுகள்...
முறிந்த உறவுகள்...
வண்டிழந்த பூக்கள்போல்
இன்னும்
எண்ணமுடியாத எவ்வளவு சோகம்!

நிஜங்களான
கனவுகளும் அழுக்காகின
கழுவப்பார்க்கிறேன்.
பிரிக்க முடியவில்லை....

மறக்க முயன்றும்
தோற்றுப் போகின்றேன்....
சுமைகளின் அழுத்தத்தால்
சோர்ந்துபோகின்றேன்....

அறுந்துபோன செருப்பாக
தெருவோரம் நாம்
உள்ளே நின்று கொல்லும்
புற்றுநோய்போல்
நெருங்கிப்பழகும் மனிதர்!

வியாபார நோக்கிலே
எதிர்பார்க்கும்
உறவுமுகம்.....
காற்றுடைத்த பலூனுக்கு
முள்ளோடு போர்?

ஏமாற்ற
பிரதிபலிப்பால்
அர்த்தமில்லா கவிகள்!
மன அமைதிக்காய்
கோயில்போய்
குழப்பம் வாங்கிய நிலை...

வெள்ளத்தில் வீழ்ந்து
உயிர்மீட்பக்காய்
கைகளை அடிக்கையில்
பாறாங்கல் தலைமேலே
இருந்தும்
மேகத்தில் பளிச்சிடும்
மின்னல்போல்
வாழ்விலே அற்ப சந்தோசம்?

இன்னும்
என் இதயம் இயங்குதென்றால்
எல்லாம் மழலையாலே...

— மட்டுவில் ஞானக்குமாரன்.



## கோபம் கொள்ளலாமா?

-பார்கவி.

உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் சந்தோஷமான நேரங்களும் வருகின்றன. சோகமான தருணங்களும் இருக்கின்றன. கோபம் கொள்ளும் நேரங்களும் பொறுமைகாக்கும் சமயங்களும் நிறைய!
உங்கள் கோபத்தை வெளிப்படுத்துவதன்மூலம், உள்ளக்கிடக்கை வெளியாகி, நிலைமை அதன்மூலம் தற்காலிகமாக சரியாகிப்போகலாம். அல்லது விபரீதமாகவும் நேரிடலாம்.
ஆனால், உங்கள் கோபம் ஏற்படுத்தக்கூடிய பின்விளைவுகள்... உங்களுக்கு சாதகமாக அமையாது!
எப்படி கோபம்வரும் அந்தத் தருணங்களை சமாளிக்க முடியும்? விவாதங்கள் முற்றி விபரீதமாவதை எப்படி தடுப்பது?
பார்க்கலாமா சிலவழிகளை...
அமைதி காத்திடுங்கள்.. உடனடியாக எதிரியங்காதீர்கள்!
உறைக்குமளவு பதிலளிப்பதைவிட உங்கள் அமைதி, சரியாக எதிரிலிருப்பவரைத் தாக்கும்.
முடிந்தால் ஜோக் ஒன்று அடித்து சூழ்நிலையை எளிதாக்குங்கள்.
உங்களை எதற்கும் லாயக்கற்றவர் என்று திட்டும்போது, 'அதனால்தான் உன்னுடன் இருக்கிறேன் என்றோ, 'நான் மோசமானவன்தான், ஆனால் அவ்வளவு மோசம் இல்லை' என்றோ சிரித்துக்கொண்டே பதிலளித்து, நீங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்துங்கள்.
விவாதத்தை ஒத்திப்போடுங்கள்.
'இதைப்பற்றிப் பிறகு பேசலாமா?' என்று சொல்லுங்கள். இது சண்டையை நிறுத்த உதவும்.
விவாதத்தை வளர்த்துக்கொண்டே, ஒருவர் மாற்றி ஒருவர் பதிலடி கொடுத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக அவரிடம் ஒரு கேள்வியோடு நின்றுவிடுங்கள். 'ஏன் அப்படிச் செய்கின்றாய்?' என்று. எதிரிலிருப்பவரை இந்தக் கேள்வி சற்றே யோசிக்க வைக்கும். விவாதத்தைக் கொஞ்சம் அறிவுபூர்வமாக்கத் தூண்டும்.
'சரி'என்று ஒப்புக்கொண்டு விடுங்கள்! 'சில சமயம் நானும் அப்படித்தான் நினைப்பதுண்டு!' இதைத்தான் அவரும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்.
இதனால் அவரது தற்காப்பு தணிந்து அவரைப் பிடித்து மடக்க உங்களுக்கு உதவும்.

(நன்றி: மங்கை)

# உ0ம் நூற்றாண்டு

## —சில முக்கிய நிகழ்வுகள்

**-எஸ். கந்தசாமி**

அத்தியாயம்-2.

**(1911ம் ஆண்டுமுதல் 1920ம் ஆண்டுவரை)**

மேற்படி காலப்பகுதியை எண்ணும்போது 1914ம் ஆண்டுஆரம்பமாகி 1918ம் ஆண்டில் முடிவுற்ற முதலாவது உலகமகாயுத்தமே முதலில் நினைவுக்கு வருகின்றது. ஜேர்மனி, ஒஸ்றியா, துருக்கி ஆகிய நாடுகளும் அவைகளின் சார்பு நாடுகளும் பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போரிட்டன.
1917ம் ஆண்டுமுதல் அமெரிக்காவும் இந்த யுத்தத்தில் பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் இணைந்து வெற்றியைத் தேடித்தந்தது.
மத்திய ஐரோப்பாவில் ஆரம்பமான இந்த யுத்தம் மத்திய கிழக்குக்கும் பரவியது. புதிய பயங்கரமான ஆயுதங்கள் இந்த யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டன. இலட்சக்கணக்கான வீரர்கள் போர்முனைகளில் மடிந்தனர். காடுகள் அழிக்கப்பட்டன. விமானங்கள் வானில் இருந்து குண்டுகளைப் பொழிந்தன. நீர்மூழ்கிகள் கடல்களில் வர்த்தகக் கப்பல்களைத் தாக்கியழித்தன.
மேற்படி யுத்தத்தின்போது 10 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதோடு 20 மில்லியனுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். விமானக் குண்டுவீச்சுக்களே பெருமளவு பொதுமக்களும் கொல்லப்படக் காரணமாக இருந்தன.
1918ல் முடிவுற்ற யுத்தத்தை அடுத்து ஜேர்மனி மிகவும் பலவீனமடைந்திருந்தது.
அதன் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்ததோடு பணமும் பெறுமதியற்றுப் போயிற்று. மக்கள் மிகுந்த வெறுப்படைந்திருந்தனர்.
இனி மேற்படி கால கட்டத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளைப் பார்ப்போம்:



*1911*

☐ சீனாவில் ஏற்பட்ட புரட்சியையடுத்து சீனா குடியரசானது.
☐ இத்தாலி லிபியாவைக் கைப்பற்றியது.

☐ துருக்கிக்கும் இத்தாலிக்குமிடையே யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்திலேயே முதன்முதலாக விமானங்கள் தாக்குதல்களுக்குப் பயன்பட்டன.
☐ முதன் முறையாக ஜேர்மனியில் பேர்லினில் இருந்து மியூனிக்கிற்கு விமானப் போக்குவரத்து ஆரம்பமானது.

*1912*

☐ பிரான்ஸ் மொறக்கோவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.
☐ முதன்முறையாக அவுஸ்திரேலியாவில் உள்ளூர்விமானப் போக்குவரத்து இடம்பெற்றது.
☐லெனின் ஸ்டாலினுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதுடன் பிராவ்டா பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.
☐ ரிட்டானிக் எனும் கப்பல் தனது கன்னிப் பயணத்தின்போது பனிக்கட்டிப் பாறையுடன் மோதி மூழ்கியது. 1513பேர் நீரில் மூழ்கி இறந்தனர்.
☐ ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி எனும் கவிதைத்தொகுப்பு வெளியாகியது.

*1913*

☐ இலக்கியத்திற்கான நோபல்பரிசு ரவீந்திரநாத் தாகூருக்கு வழங்கப்பட்டது.

*1914*

☐ வடக்கு நைஜீரியாவும் தெற்கு நைஜீரியாவும் ஒன்றிணைக்கப்பட்டன.
☐ பனாமா கால்வாய் திறந்துவைக்கப்பட்டது.
☐ முதலாவது உலகமகாயுத்தம் ஆரம்பமானது.
ஜேர்மனி ரஷ்யாவுக்கும்பிரான்சுக்கும் எதிராக யுத்தப்பிரகடனம் செய்ததுடன் பெல்ஜியத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டது.
☐ பிரிட்டன் ஜெர்மனிக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்தது.
☐ ஒஸ்றியாவும் ஜேர்மனிக்காதரவாக ரஷ்யாவுக்கெதிராக யுத்தப் பிரகடனம்செய்தது.
☐ பிரிட்டிஷ்படைகள் பிரான்ஸில் வந்திறங்கின.
☐ பிரான்சும் பிரிட்டனும் ஒஸ்றியாவுக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்தன. அதேசமயம் ரஷ்யாவும் பிரான்ஸ் பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் இணைந்து துருக்கிக்கெதிராகவும் யுத்தப் பிரகடனம்

செய்தது
- ☐ ஜேர்மனி பிரான்சின் லீகே, லிலி ஆகிய நகரங்களைக் கைப்பற்றியது.
- ☐ ரஷ்யா ஹங்கேரியை ஆக்கிரமித்துக்கொண்டது.
- ☐ அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் ஜேர்மனிக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்ததுடன் பசுபிக்பிராந்தியத்தில் ஜேர்மனியின் ஆதிக்கத்திலிருந்த காலனிகளைக் கைப்பற்றிக்கொண்டன.

1915
- ☐ ஜேர்மனி யுத்தத்தில் முதன்முறையாக நச்சுவாயுவைப் பயன்படுத்தியது.

1917
- ☐ ரஷ்யாவில் மார்ச் மாதத்திலும் நவம்பர் மாதத்திலும் புரட்சிகள் ஏற்பட்டன.
- ☐ ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியை அடுத்து லெனின்அதிகாரத்தைக் கைப்பற்றினார்.
- ☐ புதிய கம்யூனிச அரசு வர்த்தகங்களை அரசுடைமை யாக்கியதுடன் யுத்தத்தில் இருந்தும் விலகிக்கொண்டது.

1918
- ☐ முதலாவது உலக யுத்தம் முடிவுற்றது.

1919
- ☐ இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக தேசீயரீதியான எதிர்ப்பியக்கம் காந்தி தலைமையில் ஆரம்பமானது.
- ☐ முதன் முதலாக அட்லாண்டிக் சமுத்திரத்திற்கு மேலாக விமானப் போக்குவரத்து இடம்பெற்றது.

1920
- ☐ சில நாடுகள் சேர்ந்து உலகில் அமைதியைப் பேணும் நோக்குடன் ஒரு அமைப்பை உருவாக்கின.
- ☐ ஜேர்மனியில் குழப்பநிலை தோன்றியது. பொருளாதாரவீழ்ச்சியுடன் அரசாங்கம் பலவீனமடைந்திருந்தது.
- ☐ வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாகியது.
- ☐ அமெரிக்காவில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டது.
- ☐ பிரான்ஸ் சிரியா, லெபனான் ஆகிய நாடுகளின்ஆட்சியுரிமையைப் பெற்றது.
- ☐ பிரிட்டன்ஈராக்,பாலஸ்தீனம், ஜோர்டான் ஆகிய நாடுகளை ஆட்சிசெய்யும் உரிமையைப் பெற்றது.
- ☐ கென்யா பிரிட்டனின் கலெனி ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
- ☐ இவ்வாண்டு முதல் பெருமளவு பிரிட்டிஷ் மக்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறத் தொடங்கினர்.

(தொடரும்)



எங்கள்

# இளந்தளிர்கள்!



நாம் வாழத் தமிழ் வாழும். தமிழ் வாழ நாம் வாழ்வோம்.

**இளையோர்க்கான பிரத்தியேக இணைப்பு**

# அறம் செய்ய விரும்பு.

மாண்டராகப் பிறந்த அனைவரும் அறம் செய்துவாழ்வதே சிறந்த புண்ணியமாகும்.
'அறம் செய்ய விரும்பு!' என்னும் நீதிவாக்கு அறத்தின் மேன்மையை நமக்கு வலியுறுத்துகிறது.
இன்றைய உலகம் புதுமை ஆற்றல் கனிந்த உலகம். அன்புக்கும் அறத்துக்கும் அடிபணியும் உலகம்.
இவை எல்லாவற்றிலும் நிறைந்து நிற்பதான அறத்தினிடம் கொண்டிருக்கும் பக்தியை நாமும் போற்றிப் புகழவேண்டும்.
அறமென்பது கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடை.
அறத்தைத்தவிர வேறுகடவுள் இல்லையென்று அறம்படைத்தோர் கூறுவதையும் நாம்அறிவோம்.
அறத்தை தரிசிப்பதற்கான ஒரே மார்க்கம்அகிம்சைதான்.
அறத்தைத்தழுவிய மகாத்மாகாந்திகூட சத்தியத்திலும் அகிம்சையிலும் நம்பிக்கைகொண்டவராய் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்தார்.
அறமென்னும் தூய்மைக்கான மார்க்கம்மிகவும் கஷ்டமானதாகும்.
அறத்தூய்மையை ஒருவர் அடைவதற்கு அவர் எண்ணத்திலும் செயலிலும் சொல்லிலும் அன்பும் விருப்பும் சகோதரத்துவமும் கொண்டவராக இருக்கவேண்டும். இம் மூவகைத்தூய்மையும் இருப்பதாக இருந்தால் மனிதன் மனிதனாக வாழந்துவிடுவான்.
தத்துவஞானிகள்கூட மனிதன் ஆத்ம, சரீர, சமுதாய வாழ்வு பெறவேண்டுமாயின் அறம் செய்துவாழ் என்று கூறியுள்ளார்கள்.
மனிதன் கரடி புலி சிங்கம் முதலிய காட்டுமிருகங்களைப் போல் தனித்து வாழ்கின்ற சமுதாயம் அல்ல தேனீ எறும்பு கறையான் போன்ற கூட்டுவாழ்கை நடத்தும் பகுத்தறிவு படைத்த சமுதாயம் புரிந்துணர்வுடன் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து அறம் செய்து வாழ்ந்தால் நாட்டில் ஒற்றுமையும் சுபீட்சமும் வளரும்.
20ம் நூற்றாண்டில் வாழும் எம் இனமக்கள் படும் கஷ்டதுன்பங்கள் சொல்லமுடியாதவைகள்.
எங்கும் போர்,எதற்கும் போர் அர்த்தமற்ற அழிவுப்போர்.
இதனால் மக்கள்அழிவு, அகதிகள் அதிகரிப்பு, ஊனமுற்றோர் தொகை என்பன பெருகிக்கொண்டே போகின்றன. இவையெல்லாம்அறத்தை விரும்பாத கொடுங்கோல் அரசின் ஆட்சியால் விளைவனவே.
இன்று எம் இன மக்களிடமும் அறமென்னும் புண்ணியம் குறைந்தே காணப்படுகின்றது.
நீதிநூலாகிய திருக்குறளில் அறத்துப்பால் என்னும் அதிகாரத்தின் மூலம் அறத்தின் தன்மைகளை நன்கு விளக்கியுள்ளார் வள்ளுவர்.
அவற்றை நன்கு கற்றுணர்ந்து நாமும் அறவழி நடக்கவேண்டும்.

-ஆன் வினோலினி நடேசன்.



இனிய தமிழ் ஏடு.

## பூவரசு 8வது ஆண்டு நிறைவு
## எங்கள் இளந்தளிர்களுக்கான போட்டிகள்.

**போட்டி எண்:1**

**உறுப்பெழுத்துப்போட்டி:**

**பின்வரும் பாடலை உங்கள் கையெழுத்தில் உறுப்பமைய எழுதி அனுப்புதல் வேண்டும்.**

**பாடல்:**

**தமிழ்மொழி வாழ்த்து.**

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே!**
**வானமளந்தது அனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழியவே!**

**ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழியவே!**
**எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி**
**என்றென்றும் வாழியவே!**


**சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்**
**துலங்குக வையகமே!**
**தொல்லை வினைதரு தொல்லை யகன்று**
**சுடர்க தமிழ்நாடே!**

-மகாகவி பாரதியார்


போட்டி எண்:2

## சித்திரப்போட்டி

இங்குள்ள படங்களைப் பாருங்கள்.
அவற்றின் பக்கத்தில் இன்னும் வரையப்படாமல் சில உயிரினங்கள் உள்ளன.
இவைகளை நீங்கள் உங்கள் கற்பனைக்கேற்ற விதமாக வரையவேண்டும்.




வாத்தின் பின்னால் இரண்டு குஞ்சுகள் வருகின்றன.



பூனையின் எதிரே ஒரு எலி பயந்துநிற்கிறது.

நீங்கள் வரையும் படங்கள் வாத்துக் குஞ்சுகள், எலி, சிறுபறவை, வண்ணாத்துப்பூச்சி என்பனவற்றை நீங்கள் விரும்பிய அளவுகளில் வரையலாம்.





யானையின் தும்பிக்கையில்
ஒரு வண்ணாத்துப்பூச்சி அமர்ந்திருக்கின்றது.



நாயோடு ஒரு சிறு பறவை விளையாடிக்கொண்டிருக்கிறது

**போட்டி எண்: 3**


## கட்டுரைப் போட்டி

**கீழே தரப்பட்டுள்ள மூன்று தலைப்புக்களில் நீங்கள் விரும்பிய ஒரு தலைப்பின் கீழ் கட்டுரை எழுதலாம்.**

1. எனது அம்மா
2. நாடும் வீடும்
3. தமிழ்வாழ நாம் வாழ்வோம்.


## பொதுவிதிகள்.

- ☐ 5முதல் 15 வயதுவரையிலானவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
- ☐ 3போட்டிகளிலும் பங்குபெற முடியாதவர்கள் விரும்பினால் ஒருபோட்டியில் அல்லது விரும்பிய இரண்டு போட்டிகளில் பங்குபெறலாம்.
- ☐ பரிசுக்குரியவர்கள் தனித்தனிப் போட்டிகளின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவார்கள்.
- ☐ போட்டிகளில் கலந்துகொள்வோர் நடுப்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி உங்கள் ஆக்கங்களுடன் அனுப்பிவைக்கவேண்டும்.
- ☐ போட்டிகளுக்கான முடிவு திகதி 15.12.1998 ஆகும்.





## நண்டும் நரியும்.





ஒரு நரியும் தில்லைநண்டும் வழியிலே சந்தித்தன.
நண்டைப்பிடித்துத் தின்ன எண்ணிய நரி ஒரு தந்திரம் செய்தது.
நண்டைப்பார்த்து "தம்பி உன்னைக் கண்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி நாம் இருவரும் இன்று ஓட்டப்பந்தயம் ஓடுவோம். வருகிறாயா?" என்றது நரி.
"ஆம்!" என்றது நண்டு.
"நீ பந்தயத்தில் தோற்றால் உன்னைப் பிடித்துத் தின்றுவிடுவேன்!" என்றது நரி.
"அண்ணா! நான் வென்றால் என்ன செய்வீர்?" என்று கேட்டது நண்டு.
"உன்னைத் தின்றுவிட்டு விடுவேன் இது சத்தியம்!" என்றது நரி.
இரண்டும் உடன்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றன.
நண்டு நரியைப்பார்த்து "அண்ணா! நான் உனக்குப்பின்னே நின்று கீச்சிட அப்போது ஓடத் தொடங்குவோம்!" என்றது.
நரி ஓட்டத்துக்கு ஆயத்தமானது.
நண்டு நரியின் வாலின் பின்புறமாகச் சென்று அதன் வாலில் கால்களால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது
ஓட்டத்தில் கவனம் இருந்ததே தவிர வாலில் நண்டு தொங்குவது நரிக்குத் தெரியவே இல்லை.
நரி முடிவிடத்தை வந்தடைந்ததும் நண்டு வருகிறதா எனத் திரும்பிப் பார்த்தது.
நண்டு நரியின்வாலை விட்டு "அண்ணா நான் முந்திவிட்டேன்!" என்று சிரித்தது.
நரி வெட்கத்துடன் ஓடிப் போயிற்று.

**பிறரை ஏமாற்றினால் நாமும் ஏமாற்றப்படுவோம்**

-சிவஞ்ஜீவ் சிவராம்.

கடந்த இதழில் வெளியான எங்கள் இளந்தளிர்கள்
போட்டிகளுக்கான விடைகளும்
சரியானவிடைகளை எழுதியோர்,
பரிசுபெறுபவர் பற்றிய விபரங்களும்
அடுத்த இதழில் வெளியாகும்.

## ஆதவனின் ஏக்கம்.



சேவல் கூவியது.
நான் எழும்போது இந்தச் சேவல்
எத்தனை பெரிய அன்போடு என்னை
வாழ்த்துகிறது என்று ஆதவன் பூரித்துப்
போனான்.
மாலை வந்தது.
ஆதவன் மேற்குத் திசையின் மூலையில்
கவிழ்ந்தான்.
சாயும்போது-
நான் விழுகிறேனே என்னைத்தாங்க
யாருமே வரமாட்டார்களா என்று
ஏங்கினான்.
சேவலை அவன் எதிர்பார்த்தான்.
வரவில்லை.
விழுந்துகொண்டே ஆதவன் சொன்னான்
'எழும்போது தாங்க வருகிறவனெல்லாம்
விழும்போது தாங்க வருவதில்லை!'

-காசி.ஆனந்தன்

நான்படித்த கதை:
கார்த்திகா குலேந்திரன்.
(சார்புறாக்கன்)



# அன்புள்ள தம்பிக்கு!

பட்டினிச்சாவு எம் மக்களைப் பயமுறுத்துகின்றதே! அதற்கு நாம் என்னசெய்யப்போகின்றோம் எனக் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தாய். இது ஸ்ரீலங்கா அரசின் கையாலாகாத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். வன்னியில் மக்களைத் துன்பத்தில் தோய்த்து எடுத்தால் விடுதலையின்பக்கம் தலைவைத்தும் படுக்க மாட்டார்கள் என்பதே ஸ்ரீலங்காஅரசின் இன்றைய தத்துவமாகும். மிக அதிகபட்சமான துன்பத்தை தாங்கிக்கொண்டுதான் விடுதலையை அடையவேண்டும். உலகில் விடுதலையடைந்த இனங்கள் எல்லாம் கரடுமுரடான பாதையில் சென்றுதான் சுதந்திரம் பெற்றுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா அரசு வன்னிக்கான உணவு விநியோகத்தை நிறுத்திவிட்டது. இதனால் பட்டினிச்சாவை எதிர்நோக்கவிரும்பாத மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவார்கள். வரவேண்டும் என்பதே அரசின் திட்டம். இதனால் உயிலங்குளம் பகுதியில் தற்காலிகக் கூடாரங்களை அமைத்து இராணுவத்தினர் காவல் இருக்கின்றார்கள் — மக்கள் வருகையை எதிர்பார்த்து!

உலகின் அதிநவீன ஆயுதங்களையெல்லாம் வாங்கி போர் தொடுத்தார்கள். தமிழர்களுக்கு எதிராக பாவிக்கப்பட்ட அந்த ஆயுதங்கள் எல்லாம் பயனற்றுப்போன நிலையில் உணவை ஒரு ஆயுதமாக்க நினைத்த அந்தக் கோழைத்தனத்தை என்னவென்று சொல்வது? 'நேருக்கு நேர் உங்களோடு போராடமுடியாது' என்பதை இதன்மூலம் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

ஆனால் நீ ஒரு கேள்விகேட்டிருந்தாய்.
பட்டினிச்சாவை எதிர்க்க நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதே உனது கேள்வி. நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்றெல்லாம் கேட்காமல் நாம் என்ன செய்யப் போகின்றோம் என்றுதான் நீ கேட்டிருந்தாய். இங்கே எமது விடுதலைப்பாதையின் உயிர்நாடி நீ குறிப்பிட்ட 'நாம்' என்றசொல்லில் அடங்கியுள்ளது. பட்டினிச்சாவை எதிர்த்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வன்னியிலுள்ள மக்களுக்கு பல்வேறுவகைகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்மூலம் நாம் உதவிவருகின்றோம்.வன்னியில் உணவின்றி மக்களில் ஒருவர் இறந்தாலும் அது எம்மைத்தான் பாதிக்கும்.இந்நிலை ஏற்பட நாம் நிச்சயம் அனுமதிக்கக்கூடாது.எமது நாளாந்த செலவுகளில் ஒரு பகுதியைக் குறைத்து அதனைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு வழங்குவதன்மூலம்

**பட்டினிச்சாவு எமதுமக்களைப் பயமுறுத்துகின்றது!**



தொடர்ச்சி 50ம்பக்கம்

# மனிதமும் மனிதர்களும்

—த.பவானந்தராஜா

'இந்த உலகிலுள்ள எல்லாக்கருவிகளும் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. ஆனால் மனிதன் என்ற கருவி இறைவனால் படைக்கப் பட்டது.'

— இந்தக் கருத்துத்தான் 'டார்வின்' தனது பரிணாமக் கொள்கையை உலகத்திற்கு அறிமுகப்படுத்தும்வரை உலகில் நிலவி வந்தது.

'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்றார் ஒளவைப்பிராட்டியார். இப்படி அரும்பிறவி எடுத்த மனிதன் இன்று தனது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையைவிட பலதுறைகளிலும் தனது புறரீதியான வாழ்க்கையில் முன்னேறியுள்ள போதிலும், மனிதனுக்கு இருக்கவேண்டிய அகரீதியான அன்பு, தெய்வீகம், மனிதாபிமானம், தியாகம் போன்ற சிறந்த குணங்களில் முன்னேறியுள்ளானா என்றால் நிச்சயமாக இல்லை.

அப்படியிருந்திருந்திருந்தால் பூமியைவிட்டு மறு கிரகங்களுக்கு ஆள் அனுப்பி ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் இப் பூமியில் வாழும் அனைத்து மனிதர்களும் பட்டினியின்றிவாழ வழிகண்டு பிடித்திருப்பானல்லவா? தன்னைப்போன்ற மனிதன் உண்ண உணவின்றி பட்டினியால் சாகும் சோகக்காட்சிகளை படம் பிடித்து வீட்டிற்குள் கொண்டுவர கருவிகள் கண்டுபிடித்த மனிதனுக்கு உலகின் பட்டினிச்சாவை ஒழிக்க வழி கண்டு பிடிக்க முடியவில்லையே.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றான் பாரதி.

தனியொருவனல்ல இன்று பலகோடி மக்கள் உலகம் முழுதும் பட்டினியால் வாடுவதைப் பார்த்துக்கொண்டு, தாம்மட்டும் பலவேளை உண்டு மகிழ்ந்திருக்கும் மனிதரை மனிதாபிமானமுள்ளவர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

இன்று பொருளாதாரத்துறையில் முன்னேறியுள்ள பலநாடுகளும் தமது நாட்டின் வளர்ச்சியொன்றையே குறிக்கோளாகக் கொண்டு, முன்னேறிக் கொண்டிருக்கும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கிடையில் பகைமையை ஏற்படுத்தி தாம் உற்பத்தி செய்யும் நாசகார ஆயுதங்களின் விற்பனைச்



சந்தைக்கு வழிதேடிக்கொள்வதோடு, இந்த நாடுகள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை யுத்த தளபாடங்களுக்குச் செலவு செய்யும் நிலையை ஏற்படுத்துவதோடு தமது நாடுகள் மேலும் மேலும் முன்னேற்றமடையவும் மற்றைய நாடுகள் என்றும் ஏழ்மையில்வாடவும் திட்டமிட்டுச் சதி செய்கின்றன.

இதைவிட இந்த ஆயுத விநியோகத்தினால் உலகின் எல்லாப் பாகங்களிலும் அழிந்துகொண்டிருக்கும் மனித உயிர்கள்தான் எத்தனை.

இரண்டாம் உலக யுத்த காலத்தின்போது கண்டுபிடிக்கப்பட்ட அணு ஆயுதத்தால் யப்பானிய நாட்டில் பலஇலட்சம் மனித உயிர்கள் ஒரே நாளில் பலியாகினவே. அதிலிருந்தாவது உலகம் பாடம் படித்துக்கொண்டதா? அதன்பின்னராவது உலகம் மனிதம் சமாதானமாக வாழ முயற்சித்ததா? தனது இராணுவப் போட்டியிலிருந்து விடுபட்டதா? இல்லையே. இதன்பின் ருஷ்ய அமெரிக்க நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட பனிப் போரினால் அழிந்த மனித உயிர்கள்தான் எத்தனை? இந்த நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட ஏழைநாடுகளுக்கு வினியோகிக்கப்பட்ட கண்ணி வெடிகளினால் உடல் ஊனமுற்று வாழ்வே முடமாகிப்போன மனித ஜீவன்கள்தான் எத்தனை?

இன்றைய மனிதன் போக்குவரத்துத் துறை, செய்திப்பரிமாற்றம் நவீன மருத்துவம் என்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் வியக்கத் தக்களவிற்கு முன்னேறிவிட்டான் என்பதை மறுக்க முடியாது.

ஆனால் இந்த விஞ்ஞானமுன்னேற்றம் மனிதனின் ஆக்கத்திற்குப் பயன்படுவதைவிட அழிவிற்குத்தான் கூடப் பயன்படுகின்றது என்பது மனித குலத்தின் சாபக்கேடாகும்.

மனித இனம் நாகரீகமடையத்தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை பல்வேறுவிதமான வாழ்க்கைமுறைகள், ஆட்சிமுறைகள்மூலம் மகிழ்ச்சியாக வாழ முயற்சிசெய்தது. ஆனால் போரின்றி சமாதானமாக வாழ மனிதனால் முடியவில்லை.

புத்தர், யேசு போன்ற பல ஞானிகள் தோன்றி தமது நல்லுபதேசங்கள்மூலம் மனிதனைச் சீர்திருத்த முயன்றார்கள்.ஆனால் மனித குலத்திற்கு சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த அவர்களாலும் முடியவில்லை.

விலங்கிலிருந்து பரிணாமமடைந்த மனிதன் என்னதான் நற்குணமுள்ள மனிதனாக வாழ முயற்சி செய்தாலும் அவனுக்கு அடிக்கடி தலையெடுக்கும் விலங்குக் குணத்திலிருந்து விடுபடமுடியாமல் வீழ்ச்சியடையும் நிலையையே மனித சரித்திரம் நமக்குக் காட்டி நிற்கின்றது.

மனித இனத்திற்குள் காணப்படும் வேறுபாடுகளுள் முக்கியமானது மொழி ரீதியான வேறுபாடாகும்.

மொழிவழிதான் தேசிய இனங்கள் உருவாகின்றன.

இதன் அடிப்படையில் ஈழத்தமிழர்களாகிய நாமும் ஈழத்தின் வடக்கு, கிழக்குப்பகுதியில் வாழும் ஒரு தேசிய இனமாகும்.
இன்று நமது தேசிய இனம் சுதந்திரமாக வாழ நமக்கென்று ஒரு தனிநாடு அமைக்கப் போராடுகின்றோம்.
நமது தாய்நாட்டின் பெரும்பான்மை இனத்தவரினால் நம் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல் அனைத்தும் நம்நாட்டு அரசாங்கத்தினால் திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டினை சிங்களப் படையினர் கைப்பற்றுமுன்னர் நடந்த மக்கள்இடப்பெயர்வை உலகத்தின் கண்கள்முன் கொண்டுவராமல் மூடி மறைத்தது இந்த நூற்றாண்டின் மாபெரும் மனித உரிமை மீறல் நிகழ்வுகளில் ஒன்றாகும்
ஆபிரிக்கநாடுகளில் நடைபெறும் அகதிகளின் படையெடுப்புக்கள் பலவற்றையும் உலகத்தின் கண்முன் கொண்டுவந்த உலகச் செய்தி நிறுவனங்கள் ஒன்றிற்காவது நமது நாட்டில்நடக்கும் இந்த மனித உரிமை மீறல் நிகழ்வுகளை உலக மனிதத்தின்முன் கொண்டுவரமுடியாமல் போனது மிகவும் துர்ப்பாக்கிய நிகழ்வாகும்.
ஆக எத்தனை அடக்குமுறைகள், துன்புறுத்தல்கள் நேர்ந்தாலும் விடுதலைகாணத் துடிக்கும் இனங்களின் ஆத்மீகத் தாகத்தை எவராலும் அடக்கிவிட முடியாது என்பது உலக வரலாறு. என்றோ ஒருநாள் நமது இனமும் விடுதலை பெற்ற இனமாக வாழும். அன்று நாமும் நம்மிடம் காணப்படும் சாதிப்பிரிவுகள்,சீதனக் கொடுமைகள்,பிராந்திய,மத,இனரீதியான வேறுபாடுகள் எதுவுமின்றி பண்பாடு, மனிதாபிமானம் போன்றவற்றில் சிறந்த இனமாக வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே உலகெங்கும் வாழும் தமிழர்களின் முக்கிய கடமையாகும்.
உலகெங்கும் பலநிற மனிதர்கள், பல்வேறு மொழிகள் மதங்கள் ஒரே நிற மனிதருக்குள்ளும் பல்வேறுமொழிகள்,பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வுகள், என்று ஒரு குழப்பமான உலக அமைப்பு இருக்கும்வரை மனிதனுக்கு எதிரான மனிதனின் போராட்டங்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.
ஆக உலக மனிதத்தைச் சீர்ப்படுத்துவது சாதாரண மனிதனால் முடிந்த காரியம் அல்ல.ஆனால் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே சீர்திருத்தி நல்மனிதனாக வாழ்வதன் மூலம் உலக மனிதம் உய்யச் சிறிதளவாவது உதவி செய்தவர்களாவோம்.

□□□



# அரங்கம்.

கலை, இலக்கிய, சமய நிகழ்வுக் குறிப்புக்கள்.

– இரசிகன்

## பரதநாட்டிய அரங்கேற்றம்.



செல்வி ஆன் வினோலினி நடேசன்!
–பூவரசு வாசகர்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு மிகவும் அறிமுகமான பெயர்.
திரு.திருமதி நடேசன் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், நாட்டிய சாந்தி செல்வி பவித்திரா செல்வகாந்தனின் மாணவியுமான செல்வி.ஆன்வினோலினியின் பரதநாட்டிய அரங்கேற்றம் 15.08.1998 அன்று முன்ஸ்ரர் நகரில் வெகு சிறப்பாக நடை பெற்றது.
மண்டபம் நிறைந்த இரசிகர்கள்மத்தியில் ஜேர்மானிய மக்கள் பலரும் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை இரசித்து மகிழ்ந்தனர்.
அரங்கேற்ற விழாவிற்கு பேராசிரியர் ஜே.இ.வி.இராஜசூரியர் தலைமை தாங்கினார்.
பிரதம விருந்தினராக அருட்கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அருட்கலாநிதி ஜெயசேகரம் அவர்களும் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு கா.சிவநாதன் அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.
புஸ்பாஞ்சலி,அலாரிப்பு, கௌத்துவம்,ஜதீஸ்வரம்,வர்ணம்,பதம், தில்லானா,தாயக நினைவு ஆகிய நடனங்களால் தனது திறமையை வெளிப்படுத்தியிருக்கும் செல்வி ஆன் வினோலினி மேன்மேலும் பரதக்கலையைப் பயின்று கலைக்கும் மொழிக்கும் சிறப்புச் சேர்க்க வாழ்த்துகிறோம்.

## நூல் வெளியீடு.

இலக்கிய எழுத்தாளர் பொ.கருணாகரமூர்த்தி அவர்களின்
ஒரு அகதி உருவாகும் நேரம், கிழக்கு நோக்கிச் சில மேகங்கள் ஆகிய இரண்டு நூல்களினதும் வெளியீட்டு வைபவம் பேர்லினில் நடை பெற்றது.
புதுவை சட்டத்துறைச் செயலர் திரு.வயிநாராயணசாமி அவர்கள் ஒரு அகதி உருவாகும் நேரம் குறுநாவலை வெளியிட டோட்முண்ட் திரு. கணேசையா சச்சிதானந்தசிவம் அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.
அகதிஉருவாகும் நேரம்பற்றி அவர் பேசுகையில்...
'இந்நாவலின் இரண்டு பிரதான பாத்திரங்கள். ஒரு அறையில் சேர்ந்து வாழ்கிறார்கள். ஒருவன் புதிய ஜேர்மானிய கலாச்சார சூழலின் ஓட்டத்தோடு ஒத்து ஓடுகிறான். யாழ்ப்பாண மரபில் தோய்ந்துவாழ விரும்பிய மற்றவன் ஓடவில்லை. மரபுவாழ்க்கையை வாழ விரும்புபவன் தன் பக்க

நியாயங்களைச்சொல்கிறான். மற்றவன் நடிப்பில் வாழ்கின்றான். எவன்வழி சரியென்பதே வாசகன் முன் உள்ள விசாரம். ஆசிரியர் எந்தத் தீர்வும் சொல்ல முனையாமல் தீர்வை வாசகர்கள் முன் வைத்துவிடுகிறார்.

ஐரோப்பிய பாணியில் வாழ்வை இட்டுச்செல்லும் இச் சிறு சமூகத்தின் அடுத்த தலைமுறை வெகுவிரைவில் எம்மை எம் மூதாதையர் காலத்திற்கு - தந்தையெயர் தெரியாத- இட்டுச்சென்று விடுமோ என்ற பெரிய கேள்வியை நாவல் எழுப்புகின்றது.

இன்று புகலிட விமர்சகர்களால் மட்டுமல்லாமல் தமிழகத்திலும் அனைத்துப் பத்திரிகைகளாலும் பெரிதும் சிலாகிக்கப்படும் இந்நாவல் அனைத்துத் தரப்பு வாசகர்களாலும் வரவேற்பைப் பெறப்போவது உண்மை!" எனக் குறிப்பிட்டார்.

இந்நாவல்பற்றி எழிலன் விமர்சன உரை நிகழ்த்துகையில்-

'நாவலின் கருத்து மாத்திரமல்ல மொழி நடையும் மிகமிகத் தனித்துவமானது!' என்றார். வாசகர்களிடம், 'நீங்கள் வாங்கி வாசித்து திருப்தியடைந்தால்மட்டும் போதாது. உங்கள் நண்பர்களுக்கும் வாங்கிப் பரிசளியுங்கள்!' என்றார்.

எழுத்தாளர் கவிஞர் கி.செ.துரை அவர்கள்(டென்மார்க்) அசிரியரின் சிறுகதைத்தொகுதியாகிய கிழக்கு நோக்கிச் சில மேகங்கள் நூலை வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்தினார்.

இலங்கை வானொலி அறிவிப்பாளரும் கவிஞருமாகிய இளைய அப்துல்லா நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

இறுதி நிகழ்ச்சியாக நோர்வே திருமதி மல்லிகா நாகராஜன் அவர்களின் கர்நாடக இசைக் கச்சேரி நடைபெற்றது.

## வருடாந்த திருவிழா!

பிறேமன் இந்துவழிபாட்டுச் சங்கத்தினரால் கடந்த ஆண்டு ஆவணிச் சதுர்த்தியன்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ சிவசக்திக்குமரன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா 25.08.1998 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயகுரு பிரம்மஸ்ரீ சசிகரசர்மா அவர்களால் முருகனுக்கு விசேட பூசைகளும், அடியார்களால் பஜனை பண்ணிசை என்பனவும் நிகழ்த்தப்பட்டன. பிற்பகல் இளையோர்களால் பஞ்சபுராணம், சமய உரைகள் என்பன நிகழ்த்தப்பட்டன.

மாலைப் பூஜையின்பின் பிறேமன் ராஜயோகா அமைப்பைச் சேர்ந்த ஜேர்மானியரான செல்வி சூட்ரம் பாடர் அவர்களால் தியானம்பற்றி உரை நிகழ்த்தப்பட்டது.

பிறேமன் வாழ் தமிழ்மக்களின் ஆன்மீக நலன்கருதி இறைவழிபாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் மாலைநேரப் பூஜையுடன் பஜனைகளும் கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெற்றுவருகின்றன.

நவராத்திரி, கந்தசஷ்டி, சிவராத்திரி, கிருஷ்ணஜெயந்தி, ஆகிய விசேடவிரத தினங்களில் விசேடபூஜைகள் இங்கு நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

(நிகழ்ச்சிகளிலிருந்து சில நிழற்படங்கள் இந்த இதழின் அட்டைகளில்)

# வேடதாரிகள்.



தாசனும் நேசனும் தாயகமான
தமிழீழத்திலிருந்து ஒன்றாகவே பிரான்ஸ்
நாட்டுக்குள் புகுந்து புகலிடம் பெற்றனர்.
ஊரிலிருந்து வந்த நாளிலிருந்து சில
மாதங்கள் கழிந்ததும் இருவரும்
தனித்தனி றூமிலேயே வாழ்ந்து வந்தனர்.
சஞ்சலமும் சலிப்பும் கஞ்சத்தனமும்
இயக்கங்கள் ரீதியான வெறுப்பும்
இருவருக்குள்ளும் இறுக்கம்.
தொடக்ககால இயக்கப் பகைகள்
உட்பகையாகவே இன்றுவரை பிடிவிடகாது
விறைத்தவராட்டம் - வீண் விவாதங்கள்
புரியப் பயன்படுத்திக்கொள்வார்கள்.
முப்பத்தைந்து வயதைக்கடந்தும் இன்னமும்
திருமணம் ஆகாதவர்கள். நாட்டு
நடப்புக்களில் நல்லதையும் வீரத்தையும்
விவேகத்தையும் மெச்சமாட்டார்கள்.
கெட்டது,சுட்டது,விட்ட குறைகளை மோப்பம்
தேடிக் கண்டுபிடிப்பதில் படு சூரர்கள்.
இவர்கள் இருவரும் இன்றுமாலை
நேரம்குறித்துச் சந்திக்கின்றார்கள்.
மார்கழி மாதத்து ருபனியால் பூமி
பகல் பொழுதிலேயே ஈச்சங்கனிபோல்
இருண்டு கொண்டது.
அந்தக் குளிர்ந்த காற்றில் வெண்பனி
சரசரவென விழுந்து கொண்டிருந்தது.
அந்த வெண்பனியின் வெளுப்பில்
நிற்பன நகர்வன விரைவன அனைத்தையும்

கி. கிறிஸ்ரியன்
(பிரான்ஸ்)

இனம்கண்டு கொள்வது கடினமாகவே இருந்தது.

"நேசன் பாரிஸ்நகரின் பாதாள றெயின் ஏறிவந்து 'சென்மீசல் மெத்ரோ' வில் இறங்கினான். பின் வெளியேறும் படிகளேறி பரந்த வீதிக்கு வந்தான்.

திரும்பித் திரும்பிப் பார்வையைப் படரவிட்டான்.

அதிர்ச்சியிருந்து விடுபட்ட ஆனந்தம். எட்டி நடைபோட்டான்.

தாசன் குறிப்புச் சொன்ன பூங்கா முன்வாசல் முன் சென்று தரித்துநின்றான்.

சிறிது நேரம் போனதும் சிறிய சந்தேகம்!

'இந்த இடத்தில்தானே நிற்கச் சொன்னவன்! இன்னுமேன் ஆளைக் காணேல்லை?'

பனிப்பூக்கள் அவன் மேலும் விழுந்துகொண்டிருந்தது.

தலையில் வீழ்ந்தவை உடல் வெப்பத்தால் தண்ணீராய் வழிந்து கொண்டிருந்தது. ஆங்காங்கு நரைகண்ட கோலமும் தொட்டது.

வீதிகளில்நின்ற மரங்களின் நிறங்களின் நிஜங்களை துழாவிக் கண்டுபிடிப்பது விஞ்ஞானத்தின் ஆய்வின் வீராப்பாகவே தென்பட்டது.

என் தாய்நாட்டில் கனவிலும் கண்டுகொள்ளமுடியாத கண்கொள்ளாக் காட்சி.

நாற்புறமும் நூற்றுக்கணக்கான கடைகளின் கலர் விளக்குகளின் பிரகாசம், தெருக்களின் ஓரங்களில் மினுங்கும் காட்சிப் பொருட்களின் விளக்கொளிகள்; சொர்க்கத்தின் மேல்தட்டில் நிற்பதுபோன்ற பேருவகை.

நேரம் பார்த்து சந்தேகத்தைப் போக்கிட எத்தனிக்கும் ஏற்புதலுக்கு... 'யக்கற்' பொக்கற்றிலிருந்து கைகளை எடுக்கவும் கலக்கமாகவே நேசனுக்கிருந்தது.

இந்நேரம் ஒரு சிணுங்கல் பனியின் சரசரப்போடு அரட்டி அமிழ்ந்தது.

அங்குமிங்கும் மிரண்ட நேசன் மூச்சுப் புகையை வீசி வாசித்தபடி மெத்ரோ வாசலை நேர்குத்தப் பார்த்தான்.

திருதிருவென்று முழிகள் பிரளக் கிட்ட வந்ததும் வராததுமாகக் கேட்டுச் சீண்டினான் தாசன்.

"என்னடா! கனக்கநேரம் காக்க வைச்சிட்டனோ? குளிர் எப்படி? வகை சொல்ல முடியாம இருக்கல்லோ?"

"நக்கலா? என்ர சிக்கலச் சொன்னால் 'தூ இதுதானா குளிர்?' என்பா. உன்ன தற்சேலா சந்திச்சுசொல்வதைக்காட்டிலும் இன்றைக்கே சந்திச்சு என்ர மனக்குமுறலை இறக்கிடவேணும்போல் மனசு உறுத்திக்கொண்டிருந்திச்சு. அதுதான் வேலையிடத்திலிருந்து போன்பண்ணி இதில வரச்சொன்னேன்."

அவனிடமிருந்து வெளிவரும் வார்த்தைகளை உன்னிப்பாக நோக்கினான்.

"என்னென்று சொல்வேன்! போனவாரம் கொழும்பில சிங்கள இராணுவம் கொழுப்போடு சுற்றி வளைச்சுப் பிடிச்ச ஆயிரம் தமிழர்களுக்குள்ள என்ர தம்பியும் அகப்பட்டுப்போனான்! அம்மா போனில சொல்லிச்சொல்லி அழுதாங்க. இன்றுவரையும் அவன விட்டபாடாயில்ல.என்ர மண்டைக்குள்ள இதெல்லாம் என்னெண்டு மசியவில்லை. றூமில இருக்கவும் பிடிக்கயில்லை. கவலையும் கண்ணீரும் வருகுதடா நேசன். குளிர் தாங்கவே நெஞ்சும் நெருப்பா



எரியுது!"

தாசனின் புறுபுறுப்பு ஓயாது தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானித்த நேசன் இடைமறித்து —

"உந்த உபத்திரவம் உன்ர குடும்பத்துக்கு மட்டுமல்ல. ஊரில உள்ள எல்லாருக்கும்தான். நீ நீலிக்கண்ணீர் வடிக்காதே. கனக்க அலட்டிக்காதே. இசக்குப் பிசகா என்னவாகிலும் மண்டைக்கு ஆகிடப்போகுது.! பாவம்தான் சனங்கள்.!"

இந்நேரம் குளிர்நடுக்கத்திலும் நேசன் தினமும் பாடும் பாடலை நடுங்காமல் பாடினான்.

விதி என்றும் தலையெழுத்தென்றும்
சொல்வது மதியோ நம் கதியோ
சமாதானம் சமாதானம் நிதானமே
தோழர்களே தோழர்களே தோழமையோடு
வேரோடு வேரடி மண்ணோடு
பிடுங்கி எறியுங்கள் இந்தப் பேரிடியாம்
போர் என்னும்அரக்கனை!

குனிந்துநின்றபடி கவிதையைக்கேட்ட தாசன் குலுங்கிக்குலுங்கிச் சிரித்தான். நேசனுக்கு அவன் ஏன் இப்படிச் சிரிக்கிறான் என்பதை அறியவேணும்! உத்வேகக் குரல் கொடுத்துக்கேட்டான்.

"என்னடா...கவிதை பிடிக்கல்லையா?"

"கவிதை 'சுப்பர்' நீ நின்று பாடுற இடம்தான் பிடிக்கல்ல"

எரிச்சல் மேலிட நின்ற தாசன் சிரிச்சபடியே சீறிவிழுந்தான்.

"இந்தக் குளிருக்க நின்றாடா பதட்டப்படவேணும்? வாடா அந்த 'ரெஸ்ரோறன்' உள்ளநின்று சூடேற்றிக்கொண்டு கதைப்போம்"

"அடேய்! நான் நினைச்சதை நீ பொட்டு வைச்சிட்டா!"

—துரித நடையுடன் இருவரும் ஒடுங்கிய கோலமாய் அருகருகாகவே நடந்தனர்.

பனிமலர்கள் சரசரப்பது தணிந்துவிட்டது.

பனிக்காற்றின் குளிர் ஊசியாய் குத்திக் குதறியது.

"டேய் தாசன் இண்டைக்கு என்ர றூமுக்கு வாயேன். நல்ல படம் வைச்சிருக்கிறேன். சேர்ந்திருந்து பார்ப்போம். உன்ர கவலையும் கொஞ்சம் குறையுமல்லடா!" என்றான் நேசன்.

"ஏதெண்டவுடன் உனக்குப் படம் பாட்டுத்தான் வாடிக்கை. சீ..சீய்.. நான் என்ர றூமுக்குப் போகணும்.போன்வரும்" என்று அக்கறையோடு சொன்னான் தாசன்.

குளிர் நடுக்கத்தோடு தடங்களின்றி திடுமெனத் திமிறி விழுந்த குரலில் கடுமையான பதட்டம் அங்கம் நடுங்கி நீண்டது. தாசனைப் பார்க்கிறப்போ சமாதானப் பேச்சுக்கொடுத்துச் சமாளிப்பதைவிட குடிக்கக்கொடுத்து பீடிகை

போடுவதுதான் புத்திசாலித்தனம். பெருமூச்சைவிட்டபின் சிறு மூச்சை மூசி இழுத்தபடி ரெஸ்ரோறன் கண்ணாடிக் கதவை அடிபடத் தள்ளி உள்ளே நுழைந்தனர் உள்ளபோன இருவரையும் அங்காங்கு மேசைமுன் நாற்காலியி லிருந்த சிலர் பூனைக்கண்விழுங்கப் பார்த்தனர்.இந்த இரவுநேரப் பார்வையில் ஒடிசலான சணல்நிற மயிர் வெள்ளைப்பெண்களின் சிரிப்பில் பித்தம் தலைக்கேறும் சங்கடப் பிடிப்பு பிதுங்கி நின்றது.வாய்க்குள்விட்ட சிரிப்பு தாசனுக்கும் நேசனுக்கும். ஒருவரையொருவர் முகத்தைப் பார்த்து மௌனித்திருந்தனர். இத்தனைக்கும் தாசன் வேலை பார்க்கும் ரெஸ்ரோறன் ஐம்பது மீற்றர் தூரத்தில்தான் உள்ளது. விலைமாதுகளை பேரம்பேசிய நிலவரங்கள் நிஜமெனக்கண்டதுண்டு.. திடீரென மௌனத்தைக் கலைத்தான் தாசன்.

"என்னடா நேசன் ஊர்ப்புதினம் கேள்விப்பட்டியா?"

"அப்படிப் பெரிசாயொன்றும் நானறியல்லத் தாசன்"

"நம்மாக்களுக்கு சாமான்கள் கொண்டுவந்த கப்பலையல்லோடா முல்லைத் தீவுக் கடலில்வைத்து 'பம்' பண்ணியிற்றான்! சிங்களவன்ர கையாலாகாத் தனத்தைப் பார்த்ியாடா?"

"அடே! கப்பலையா? எப்பயடா?"

"நேற்றுத்தான்!

"கனக்கச் சேதமோ?"

"கப்பல் எங்கிறப்போ கொஞ்ச நஞ்சமாகவா இருக்குமடா?

"அவங்கோட போய் இவங்க மோத முடியுமாடா?"

"மோதாமலாடா இருக்கிறாங்க?"

"மோதி என்னடா வரப்போகுது?"

"உங்களப்போல ஆக்களிருந்தா இப்படித்தான் கதைப்பீங்க.சீமைக்கு வந்தும் திருந்திறாப்போல இல்லையாங்க?"

"என்னடா! பட்டமரத்தில பால் வடியுது? எப்பயீங்க நீங்க கட்சிமாறினீங்க?"

"இல்லையடா! கண்கெட்டபின்பு சூரியநமஸ்காரம் பண்ணி என்னடா பிரயோசனம்?"

"கதையைவிட்டுட்டு முதலில குடியுங்க. சனங்கள் சாகுது. சோறு, கஞ்சிக்கு அலையுது...நீங்க குடியுங்க!"

"சரிசரி நீங்களும் எடுங்களேன்!"

இருவரும் அண்ணாந்து ஊத்திவிட்டுச் சிலிர்ப்பி நின்றனர். இந்நேரம் நான் பாடினேன் கவிதை.

வேடதாரிகளின் வேசங்களைப் பாருங்கள்
கோடு போட்டது யாரடா? — இவங்கள்
நாடுவிட்டு நாடுவந்து நடிப்பதைப்பாரடா
கேடுகெட்ட மானிடரே கேடுகெட்ட மானிடரே
பகல் எப்போதோ முடிந்துவிட்டது...
நடப்புக்கள் எல்லாம் இருளாகிவிட்டதால்...!"



சூடேற்றிய உசாரோடு கைக்கடிகாரத்தைப் பார்த்தான் நேசன்.

நேரம் நடுச்சாமம் ஒரு மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது.

கண்ணாடிக் கதவைத்திறந்து வெளியிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தான் சனங்களின் நடமாட்டமும் தெரியவில்லை.

மெத்ரோவைப் பிடிச்சு றூம்போவது இண்டைக்கு நடவாத நடப்பு. விழுந்த பனியும் நின்றுவிட்டது. வீதியில் உறைஞ்ச பனி உருகி உசிரவேற வாங்கப் போகுது. போட்ட விஸ்கியும் தாக்குப் பிடிக்காது. உடற்கட்டும் இளமையும் தெம்பைக் கொடுத்தாலும் அந்த இரவில் வெளிவந்து வீதியில் நடப்பதற்கு அஞ்சி நின்றனர்.

ரெஸ்ரோறன் 'பத்தோரன்' (முதலாளி)கிட்டப்போன தாசன் என்ன கதைச்சான்? டாக்ஸிக்குப் போன்பண்ணச் சொல்லிவிட்டு வந்தான்.

இதற்குள் நேசன் ஒலிசான பெண்ணை மோப்பம் பிடிச்சுவிட்டு வந்து நின்றான்.

டாக்ஸி ரெஸ்ரோறன் வாசல் முன்வந்து நின்றது.

மிகுதியாகக் கிளாசிலிருந்த விஸ்கியையும் அண்ணாந்து ஊத்திக் கொண்டனர். நின்றவர்கள் எல்லோருக்கும் "உவா உவா...!" சொன்னபடி கைத்தாங்கலோடு வெளிவந்தனர். நேசனின் கைத்தாங்கலைத் தவறவிட்ட தாசன் உறைபனியில் காலை நிதானமற்று வைத்ததால் சறுக்கி முழங்கால் முட்டிகுத்த விழுந்தான். ஒருமுறை அந்த இடத்திலேயே.

"அம்மா...அம்மா.." என்றழைத்தான்.

தாய்மொழியும் — தாய்நாடும் இரவின் நிசப்தத்தில் எதிரொலித்தது.

வெண்பனிகள் கறுத்துப் போய்விட்டது.

தெருவிளக்குகள் தெரு நாய்களைப்பார்த்து மின்னிமின்னிச் சிரித்தது.

மூடுபனி கொட்டியதை நிறுத்திக்கொண்டதால் கொண்டலும் மின்னலும் கண்களைப்பறித்திடப் படர்ந்தது — சுடர்ந்தது.

டாக்ஸிக்குள் கேலியும் கும்மாளமும் அடித்துக்கொண்டிருந்தவர்களை அடிக்கொருதடவை திரும்பிப்பார்த்து இகழ்ச்சியாகச் சிரித்தான் றைவர். அவன் ஒரு ஆப்பிரிக்கன். அவன் சிரிப்பில் மிக ஏளனம் இருந்தது. பைத்தியக்காரன்களின் பலவீனம் கண்டு எள்ளி நகையாடினான். கேள்வி கேட்டால் சோலியாகிவிடும் எனும் கூச்சக் கலக்கம் கனத்திருந்தது. றைவர் ஒருகணம் திரும்பிப்பார்த்துவிட்டு ஓரமாக டாக்ஸியை நிற்பாட்டினான்.

பின்பு வெறுப்போடு "மிசு (ஐயா) நீங்கள் குறிப்பிட்ட இடம் வந்துட்டு பணத்தைத் தந்திட்டு இறங்குங்கள்"

நேசனும் தாசனும் சேர்ந்தாற்போல்

"ஓக்கே...ஓக்கே..."

பின்கதவைத் திறந்து இறங்கி தாசன் தன் பொக்கற்றிலிருந்து எடுத்த பணத்தை நீட்டியபடி "மெசி(நன்றி)" என்றான்.

பின் பின்னாடி நின்ற நேசனைப் பார்த்துக்கேட்டான்.

"என்னடா நேசன் நாங்க நிக்கிற இடம் 'காடட்நோட்' (Gare du Nord)

தானடா?"
"ஓமடா. உன்ர றூம் அப்பாட்மென்னுக்கு நேரதான்ரா நிக்கிறோம்!"
இருவரும் தள்ளாடியபடி மாடிப்படிகள் ஏறி றூம் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தனர்.
தாசன் முதல்வேலையாக மேசைமீதிருந்த றிமோட் கொன்றோலை எடுத்து ஆறாவது சனல் புறோக்கிறாமைத் தட்டினான்.
நேசன் சொன்ன நல்லபடம் போய்க்கொண்டிருந்தது.
அதைப்பார்த்துச் சிரிச்சபடி தாசன் நேசனைப்பார்த்துக்கேட்டான்.
"என்னடா நேசன் நீதான் நல்லாச் சமைப்பாய். தின்ன என்னெண்டாலும் சமையன்ரே!"
இந்நேரம் கதவு தட்டும் சத்தம் கேட்டது.
இந்தநேரத்தில் யாராக இருக்கும் என்ற பிரமிப்புக்கலந்த ஆச்சரிய வியப்பு தாசன் முகத்தில் முத்தவில்லை.
இரண்டு கவடு விரிப்போடு கதவை பட்டென்று திறந்தான்.
இருசோடிக் கண்களும் பிசகின்றி பிதுங்கி மயிர்க்கால்கள் சிலிர்த்திட மதுவின் கிறுதி முறிஞ்சு காமப் பித்தம் சிரசிலடிக்க கெலியுடன் கெம்பி நின்றனர்.
அவள் பிரஞ்சுமொழியில் அனுங்கியபடி உள்ள நுழைந்து கட்டிலில் கால்விரித்து சாய்ந்துகொண்டாள்.
நேசன் சமையலில் மூழ்கினானா? அந்த வெள்ளைமாது துடுக்காக ஏறிய தொனியில் தாசனைப்பார்த்துப் பேசத்தொடங்கினாள்.
"நான் இன்றைக்குப் பலமுறைவந்து கதவைத்தட்டினேன். ஊம் உம்மைக் காணயில்லை. அதுதான் இங்கால லாச்சப்பல் (Lachapelle) பக்கமாப் போயிற்று வாரேன்"
இப்படியே நேரம் சல்லாபத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.
தூக்கம் கண்களைத் தழுவட்டுமே...

தயாராகிறது!
பூவரசு எட்டாவது ஆண்டு நிறைவு மலர்.
வழக்கம்போல்– வண்ணமுகப்பு
அதிகபக்கங்கள்.



பகல் எப்போதோ முடிந்து விட்டது.
நடப்புகள் எல்லாம் இருளாகிவிட்டது.

தொலைபேசி மணி கணீரென்றது.
தாசன் துடிச்சுப் பதைச்சு கட்டிலை விட்டெழுந்து விழுந்தடிச்சு றிசீவரை எடுத்து காதில் பொருத்தினான்.
"ஹலோ!"
"ஹலோ..ஹலோ மகனே தார் தாசனா?"
"..............................."
"ஹலோ...யார்தம்பி?"
"அம்மா! நான்தானம்மா சொல்லுங்கோ!"
"மகனே! சுகமா இருக்கிறீயாப்பா?"
"இப்போ சந்தோஷமா இருக்கிறேனம்மா!"
"என்ர மகனே உன்ர தம்பி இண்டைக்கு சாமம்தான் பொலிசிலையிருந்து வெளிய வந்தான்... அறுவாலுகள் நாசமாப்போக!"
"ரொம்பச்சந்தோஷம் அம்மா.நீங்க போனைவையுங்க... நான் பேந்தெடுக்கிறன்"
"கட்!"
குதூகலமும் கும்மாளமும் பின்பும் நீடித்தது.
இருள் விலகிப் பகல்பொழுது புலர்ந்தும் அவர்களது அறை இருளாகவே இருந்தது. நேசன் வேலைக்கு இறங்க ஆயத்தமானான். வாசல் கதவைத் திறந்து பிடித்தபடி கேரலான குரலில் கேட்டான்,—
"இண்டைக்கு இரவும் இவள் வருவாளா?"
தாசன் மௌனப் புன்னகையுடன் தலையசைத்தான்
"கட்"
"கட்"
□□□

**1999 தைத்திங்களில் வெளியாகவுள்ள பூவரசு ஆண்டுமலருக்கென ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் 30.11.1998 திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

*எழிலன் எழுதிவரும்......*

# சத்தியத்தின் சுவடுகள்

- தென்னாப்பிரிக்க சுதந்திர வீரன் பிக்கோவின் வரலாற்றின் சில பக்கங்கள் –

**சுவடு பதினான்கு**

## செவிமடுப்போன் உணர்வுக்கு மதிப்பளித்தால்
## சொல்கருத்து செவியேறச் செய்திடலாம்

பீக்கோவின் மனதுக்குள் கொந்தளித்துக் கொண்டிருந்த உணர்வுகளை திரு.டொனால்ட் மிகவும் கவனமாக அவதானித்தார்.

அவனது பாரிய கட்டுமஸ்தான உடல் தனது நாற்காலியில் நேராகவும் நேர்த்தியாகவும் அமர்ந்து கொண்டது. ஒரு நீண்ட கலந்துரையாடலுக்கான ஆயத்தநிலையை அந்த அமர்வு புலப்படுத்தியது.

திரு. டொனால்ட் அவர்களின் பேச்சு அவனைப் பாதித்தது என்பதைவிட அது அவனை மிகவும் திருப்திப்படவும் தனக்கு முன்னால் நிற்பவர் தனது மக்களின் நிலைப்பாட்டை உணர வேண்டியவரும் அவரது இனத்தினர்க்கு உணர்த்த வேண்டியவருமாக இருக்கும் பொறுப்புமிக்கவர் என்பதை உணரவும் வைத்ததாகவே தெரிந்தது.

"மிஸ்டர் டொனால்ட் தாங்கள் குறிப்பிட்டுள்ளபடி எனது அன்றைய கட்டுரையில் சில கருத்துக்களில் கடும்போக்கு காணப்பட்டது உண்மைதான் என்றாலும் அடிப்படை நோக்கத்தில் அது மிகத் தெளிவான கொள்கையைப் பிரதிபலித்தமையை க் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் நீங்கள்.

கறுப்பினத்தவரின் விடுதலை யானது உண்மையில் கறுப்பினர் மனநிலையில் தம்மில் தாமே சார்ந்திருக்கும் அடிப்படைக் கொள்கையை அதாவது தமது சுயபலத்தில் , தமது சுயநம்பிக்கையில் , தமது சுயநிர்ணயத்தில் நம்பியிருக்கும் உறுதியை உணர்த்தியிருக்க வேண்டும். அதுதான் அவர்களை நிமிர்ந்து நிற்கும் சுயஉரிமையை அவர்களுக்கு ஈட்டித்தரும். அதை அவர்கள் சரியாகக் கண்டு கொள்ள வேண்டுமென்றால் அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் அவர்களின் இனம் சாரா பகுதியினரின் நன்நோக்கங்கள்கூட அவர்களின் தனித்துவ மனவுறுதிக்குப் பாதகமானவை என்பதை உணர்த்தி வைப்பது மிகவும் முக்கியம்.

அதாவது தன்பலம் உணராமல் பிறர் துணையை நம்பி நிற்கும் அறியாமையை அகற்றுவதே முதல் கடமை"

பிக்கோ தொடர்ந்தான்

"நான் மிதவாதத்தையோ வெள்ளைய மிதவாதிகளையோ எதிர்க்கவில்லை. ஆனால் கறுப்பினத்தினரின் விடுதலை வெள்ளை விடுதலைவாதிகளின் தலைமையில் வெள்ளையரிடமிருந்து மீட்கலாமென்பதையே முற்றாக மறுத்து நிற்கிறேன்"

திரு.டொனால்ட் குறுக்கிட்டார் இப்போது.

"அது ஏன் வெள்ளை யர் தலைமையிலானதாக இருக்க வேண்டும்? கறுப்பினர் அவர்களுக்குப் பதிலாக இயங்க முடியாதா?"

பிக்கோ முறுவலித்தான்.இவருக்குத் தெரியாததா இந்நாட்டுச் சட்டங்கள்? அவன் மனம் ஒரு கணம் கேட்டுக் கொண்டது. என்றாலும் கேள்விக்கு பதில் என்பதே கலந்துரையாட லின் முக்கிய அம்சம் என்பதால் தன்பக்க வாதத்தை முன்வைத்து பேச்சைத் தொடர்ந்தான்.

"நீங்கள் நினைப்பதுபோல அது அவ்வளவு இலகுவல்லவே! இந்நாட்டின் முழுஅரசியல் அமைப்புமே அதற்கு எதிரானது. அதாவது இக்கொள்கை நடைமுறை அரசியலுக்கு ஒத்து வர முடியாதது.உதாரணமாக பல்லின அரசியல் அமைப்புக்கள் சட்டரீதியாகவே சட்டவிரோதமானவை என்பது இந்நாட்டின் சட்டம்.அல்லவா?"

"மிஸ்டர் பிக்கோ!".....திரு. டொனால்ட் குறிக்கிட்டார். அவரது குரலில் கடினம் கூடியது.

"உங்களது வெளிப்படையான கொள்கை விரோதி வெள்ளை இனவாத – ஆப்பிரிக்க தேசிய அல்லது ஐக்கிய கட்சிக்காரன்தானேதவிர அவர்களை எதிர்த்து நிற்கும், மறுத்து நிற்கும் மிதவாத அல்லது முற்போக்கு இயக்கத்தினர் அல்லவே! பிறகேன் அவர்களை முதன் முதலில் சாடுகின்றீர்கள்? எதிர்க்கின்றீர்கள்?"

தற்காப்புக் கலையில் தேர்ச்சி பெற்றனுக்கு எதிரியின் அடி எப்படி வந்தால் எப்படித் தடுப்பது என்பதில் முன்கூட்டிய எதிர்பார்ப்பு இருக்கும். அப்போதுதான் அவனால் எதிரியின் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். அல்லவா!

பிக்கோவின் முகத்திலும் டொனால்டின் இந்தக் கேள்விவரும் என்ற எதிர்பார்ப்பு இருந்தமை படமாகத் தெரிந்தது. அவனது புன்முறுவல் அதற்கான விடையை ஏற்கனவே வைத்திருப்பதையும் இதோ தரப்போகிறேன் என்பதையும் வெளிக்காட்டி நின்றது.

"நிச்சயமாக இந்த வெள்ளை நிறவாதிகளும் அவர்களின் இயககங்களும்தான் எங்களின் முதல் எதிரியும் குறியும்.சந்தேகமில்லை.
ஆனால் எங்கள் எதிரிக்கெதிரான சவாலுக்கெதிராக எங்களை தயார்ப்படுத்திக் கொள்ளும்போது முதன் முதலில் எங்களின் வேகத்தை மட்டுப்படுத்திவரும் நண்பனிலிருந்து நாங்கள் விலகிக் கொள்ள வேண்டும்.
மிதவாத இயக்கம் எங்கள் எதிரியல்ல எங்கள் நண்பன்தான். ஆனால் எங்கள் போராட்டத்தின் வேகத்துக்கு இணையில்லாத மிக மென்மையான வழிமுறையை எங்களுக்காக , எங்கள் சார்பாகமுன்வைத்து நிற்கின்றதை ஏற்க முடியவில்லை. இது எங்கள் போராட்டத்தின் வெற்றிக்கு உதவுவதில் மிகமிகப் போதாத தகைமையையுடையதாகவிருக்கின்றது."

டொனால்ட் விவாதத்திற்கு சூடேற்றினார்.

" நல்லது. இதுவரை சொன்னதெல்லாம் சரிதான். ஆனால்இந்த தனியான கறுப்பர் மட்டும் என்ற போக்கு எனக்குப் பிடிக்கவேயில்லை.
இந்த கறுப்பர் விழிப்புணர்வுக்கொள்கையை நீங்கள் அடைந்துவிடக்கூடும். ஆனால் நாளைக்கு அதுவே மிகத்தீவர மாகிவிட்டால் அதை எப்படிக் கட்டுப்படுத்தப் போகின்றீர்கள்?
அதுவே கறுப்பின வெறியுணர்வாகவும் வெள்ளையினத்துக்கெதிரான துவேஷமாகவும் உருவெடுத்துவிட்டால் அதை எப்படித் தடுக்கப் போகின்றீர்கள்?"

பிக்கோ ஒரு வினாடி அவரை உற்று நோக்கினான்.ஒரு வெள்ளையனின் நிலையிலிருந்து பார்த்தால் டொனால்டின் கவலை நியாயமானதுதான். என்றாலும்....

அவன் விளக்கம் தரத் தொடங்கினான்.

"அது அவ்விதம் மாற வாய்ப்பில்லை..ஏனென்றால் இக்கொள்கை தனிப்பட்ட மனிதர்க்கு எதிரானதல்ல. தனிப்பட்ட இயக்கங்களுக்கேகூட எதிரானதல்ல. ஒரு பிழையான கொள்கைக்கெதிரான அணுகுமுறையே இது.

அதே வேளை நீங்கள் குறிப்பிடுவதுபோல ஆங்காங்கே சிற்சில வெள்ளையர்க்கெதிரான உணர்வுகள் உருவாகவும் கூடும்.ஆனால் அதைத் தடுப்பதற்கானவற்றைச் செய்யவே செய்வோம். என்றாலும் வெளிப்படையாக உண்மையைச் சொல்வதானால் இவ்விஷயம் எங்களைப் பொறுத்தவரை முதன்மைக்குரியதோ அல்லது அதிமுக்கிய நிலைப்பாடுடையதோ அல்ல..

எங்களின் முழுமுதல் நோக்கம் கறுப்பினத்தவரின் விடுதலைதான். இந்நாட்டின் பெரும்பான்மையினரான அவர்களின் முழுமையான விடுதலைதான். ஆனால் அதே சமயம் எல்லாருக்கும் சமத்துவமும் சுதந்திரமும் வழங்கும் நாடாக இதனை அமைத்திடும்போது இரு இனத்தவரும் வரவேற்கப்படுபவர்களாகவே இருப்பார்கள்.அதுவரைக்கும் இந்நாட்டு கறுப்பரின் அதிமுக்கியத்துவமிக்க அடிப்படைத் தேவைகளுக்கே முன்னுரிமை அளித்து நிற்க வேண்டியுள்ளது. கறுப்பரின் உணர்வுகளுக்கு முன்னுரிமையளிப்பதே இன்றைக்கு முக்கியம். வெள்ளையரின் உணர்வுகளுக்கல்ல.



டொனால்டுக்கு உண்மை புரிந்தது. ஆம்! சகல வல்லமைகளையும் எடுத்துக் கொண்டு அடக்கி வாழ்கின்ற ஆதிக்க ஆட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் முதல் பலன் முதலில் பாதிக்கப்படுபவர்களுக்கே போய்ச்சேர வேண்டும் என்பது நியாயந்தானே என்று மனம் சொல்ல ,அதை அவரது புன்முறுவல் வெளியில் காட்ட முனைந்தது.

அவர் கேட்டார்
"ஆதுசரி, என்னுடன் எதற்காகப் பேச விரும்பினீர்கள்?"

பிக்கோ மிகத் தெளிவாக – அதாவது உண்மையாக – அவரது கேள்வியை இரசித்துச் சிரித்தான்.

"உங்களைப்பற்றி பெரும்பான்மையான கறுப்பினத்தவர்கள் நீங்கள் மிகவும் துணிச்சலும் திகிலூட்டும் சக்தியுமிக்கவராகக் கருதுகின்றார்கள்.அதுமட்டுமல்ல உங்களது ஆசிரியத்தலையங்கங்களின் சக்தி மகத்தான பின்தொடர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால்...."

"ஆனால்?"

" உண்மையில் அது உண்மையானால் கறுப்பின விழிப்புணர்வியக்க ம் பற்றிய உங்கள் தலையங்கங்களில் எந்தளவிற்கு நியாயமான, உறுதியான ,சரியான,தாக்கமான அதாவது கறுப்பினத்தவர்களுக்கு மற்ற எந்த ஏடும் செய்திராதபடிக்கு இடம் கொடுத்து ஒத்துழைக்க் கூடியவர் நீங்கள் என்றே அறிய முனைந்தேன்"

டொனால்டுக்கு பிக்கோவின் வெளிப்படையான பேச்சு மிகப்பிடித்திருந்தது. தமது சந்திப்பின் முடிவில் பிக்கோ கேட்டுக் கொண்டதற்கிணங்க தமது பத்திரிகையில் கறுப்பர் விழிப்புணர்வியக்கம் பற்றிய தொடர் கட்டுரையெழுத இடமொதுக்குவதாகவும் அவர்களின் செய்திகளைச் சேகரித்தெழுத ஒரு கறுப்பின செய்தியாளரை நியமிப்பதாகவும் வாக்களித்தார். மேலும் பல விடயங்களைப் பற்றிய தொடர்ச்சியில் நேரம் போனதே தெரியவில்லை. கடைசியில் டொனால்ட் விடைபெற்றுக் கொண்டார்.

பிக்கோ அவரை வழியனுப்ப வந்தபோது இருட்டில் டொனால்டின் பிறவுண் நிற மெர்சிடஸ் பென்ஸ் பளபளவென மின்னியவாறு நின்று கொண்டிருந்தது. அதைக்கண்டதும் தனது கண்களைச் சட்டென்று கைகளால் மூடிக்கொண்டு பிக்கோ கூறினான்." கடவுளே! ஒரு மக்களின் செம்மல் எப்படி இப்படியானவொரு வாகனத்தில் பவனிவர முடிகின்றது" முதலாளித்துவத்தின் சின்னமாக மின்னிக் கொண்டிருந்த அவ்வாகனத்துள் நுழைந்து கொண்டு தமக்கேயுரிய எழுத்தாள தனித்துவத்துவக் குரலில் டொனால்ட் சொன்னார்.
*"இதோ பாருங்கள்!.உங்கள் கறுப்பருக்கானதை நீங்கள் செய்யுங்கள்.எங்கள் வெள்ளையர் செய்வதை நான் செய்து கொள்கிறேன்.வெள்ளையர்க்கான சலுகைகளின் காலம் மிகக் குறுகியதாக இருப்பதால் அதற்குள் இதை நான் அனுபவித்துக்கொள்கிறேன். சரிதானே!"*
டொனால்டின் வண்டி அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சந்தியில் திரும்பும்போதும் பிக்கோவின் உரத்த சிரிப்பொலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

*–தொடரும்*

33ம்பக்கத்தொடர்ச்சி

வன்னியில் ஏற்படப்போகும் பட்டினிச்சாவை நாம் தடுத்துநிறுத்தலாம். இது எங்களால் செய்யக்கூடிய உதவி. எமது இனம் வாழ நாம் அள்ளிக் கொடுக்கவேண்டும்.

ஸ்ரீலங்காஅரசு உலகிலுள்ள சகல மனிதவுரிமை பாதுகாப்பு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளது. ஆனால் இன்று மனித உரிமை மீறல்களுக்கு உலகிலேயே முதன்மை வகிக்கும் நாடு ஸ்ரீலங்கா.

'எமது ஆட்சியில் இனக்கலவரம் ஏற்படவே இல்லை!' என ஸ்ரீலங்கா ஜனாதிபதி அண்மையில் கூறியுள்ளார்.பாதுகாப்புப் படையினர் தமிழர்களுக்கு செய்யும் கொடுமைகள் ஒன்றா இரண்டா. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, தாக்குதல்கள், அங்கயீனர்களாக்குதல் ஆகிய பல்வேறு கொடுமைகளுக்கு தமிழர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவற்றை விடவும் ஒருஇனக்கலவரம் தேவைதானா?

சிங்கள இராணுவப்படை தமிழர்களுக்கு இத்தனை கொடுமைகளையும் செய்கின்றதென்றால் ஜனாதிபதி சந்திரிகா கூறுவதைப் போன்று மேலும் ஒரு இனக்கலவரம் தேவைதானா? சிலவேளை நீ இவற்றை சிந்திக்கும்போது பொறுப்புவாய்ந்த ஜனாதிபதி ஒருவர் இப்படியெல்லாம் பிதற்றலாமா என்றுகூட நீகேட்பாய். சிங்களமக்களை ஏமாற்றும் பிதற்றல்கள் இவை.

ஜேர்மனியில் தற்போது அகதிகளின்நிலை மோசமாகிக்கொண்டு வருகின்றது என்பதை உனக்குச் சொல்லித்தானாக வேண்டும். அகதிகள் பல இடங்களில் தீவிர நாசிவலதுசாரிகளினால் தாக்கப்படுகின்றார்கள்.குறிப்பாக முன்னாள் கிழக்குஜேர்மன் பகுதிகளில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அகதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவென மாபெரும் பேரணியொன்று நடைபெறுகிறது. ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி பிறேமன் நகரில் ஆரம்பித்த இப்பேரணி ஜேர்மனியின் 40 பிரதான நகரங்களுக்கூடாக கேல்ன் நகரை செப்டம்பர் 19ம் திகதி சென்றடையும்.

ஜேர்மனியில் அகதிகளின் விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகின்றன. இவை உனக்கு ஆச்சரியத்தைத்தரலாம் என நினைக்கின்றேன்.அண்மையில் இலங்கை அகதி ஒருவரின் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்படுகையில் ஒரு நீதிபதி தெரிவித்த கருத்தொன்றை நீயும் அறிந்துகொள்ளவேண்டும்.

'தினமும் இலங்கைத்தமிழர் பலர் எவ்வித பிரச்சினையும் இன்றி ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணம்வரை சென்று வருகின்றனர். இந்நிலையில் தாம் நாடுதிரும்பினால் உயிருக்கு ஆபத்து என விண்ணப்பதாரர்கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது!' என்றார் நீதிபதி.

ஜேர்மனியிலிருந்து தாயகம் சென்றுவிட்டுத்திரும்புவோர் அதிகரித்துள்ளனர். இந்நிலையில் இங்கு தமிழர்கள் புதிதாக அகதி விண்ணப்பம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

'வெளிநாடுகளில்இருந்துவரும் தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினையும்



கொடுக்காது இவர்களைமகிழ்ச்சியுடன்வரவேற்று மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வையுங்கள்!' என வெளிநாட்டமைச்சர் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டுள்ளார். ஏன் அவர் இப்படிக் கூறியுள்ளார் என்பதைப்பற்றி நீ பலமாக யோசனையில் ஈடுபடத்தேவையில்லை.

அதனை அவரே கூறுகிறார் —

'அப்போதுதான் அவர்கள் வெளிநாடுகளில் எமது அரசைப்பற்றி புகழ்ந்து கூறுவார்கள்.அங்கே எவ்வித பிரச்சினையும் இல்லையென்று அவர்கள் கூறுவதே எமக்குச் சிறந்த பரப்புரையாகும். அத்துடன் வெளிநாட்டுச் செலாவணியும் வந்துகொண்டிருக்கும்.!'

பார்த்தாயா இந்தக் கதிர்காமரின்கூற்றை. இங்குள்ள தமிழர்கள் இதைப்பற்றிக் கருத்தில் எடுப்பார்களா?

தாயகத்திற்குப் போகவேண்டும் என்பதற்கான பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் அதனால் ஏற்படும் பாரியவிளைவுகளை அங்குள்ள வெளிநாட்டமைச்சரே குறிப்பிடுகின்றார். வெளிநாடுகளிலுள்ள ஸ்ரீலங்காவின் தூதுவராலயங்கள் தமிழர்கள்சொந்தநாட்டிற்குச்சென்று திரும்பிவருவதற்குரிய ஏற்பாடுகளை செய்கின்றன என்றால் அதன் முக்கியத்துவம் எத்தகையது என்பதை அறிந்துகொள்.

அங்கு செம்மணியில் மாத்திரமா புதை குழிகள்? ஒவ்வொரு இராணுவ முகாமுக்கு அருகிலும்புதைகுழிகள்என்பதை யாருக்கு எடுத்துச்சொல்வது? கைது செய்கின்றார்கள். புலியா எனக்கேட்டு அடித்துச் சித்திரவதை செய்கின்றார்கள். சித்திரவதை செய்யப்படுகையில் அடி தாங்காமல் மரணமடைகின்றார்கள். உடனடியாக அருகில் குழிவெட்டிப் புதைக்கப் படுகின்றார்கள். உறவினர்கள் வந்துகேட்டால் யாரும் இங்கே இல்லை யாரையும் நாம் கைதுசெய்யவில்லை என்றே கூறி வருகின்றார்கள். உலகில் எங்கும் நடக்காத கொடுமை. ஆனால் தாயகத்திற்குச் சென்று திரும்பும் தமிழர்கள் இங்குவந்துஅங்கே ஒருபிரச்சினையும் இல்லையென்று கூறினால் நமது நிலை என்ன? சுயநலத்தை மறந்து சற்றுச்சிந்தித்தால் உண்மை நிலையை அறிந்துகொள்வார்கள். ஸ்ரீலங்காவுக்குச் சென்றுதிரும்பிய ஒருசிலரின் நிரந்தரவிசா திரும்பப்பெற்றுள்ளதாக அறியப்படுகின்றது. அங்கே பிரச்சினையில்லையெனில் ஏன் நீங்கள் இங்கே இருக்கின்றீர்கள் என்றும் ஒருசில அகதிகளைக் கேட்டுள்ளனர்.இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

எப்படி இருந்தாலும் இந்தநாடு எமக்கு நிரந்தரமில்லை என்பதை நீயும் நானும் மாத்திரமல்ல புலம்பெயர்வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும்

மீண்டும் சந்திப்போம்.
அன்புடன் அண்ணன்
**வீ. ஆர். வரதராஜா.**

# பூவரசு பற்றி நான்.

தாயகத்தில் அரசியல்வாதிகளின் சுயசிந்தனைச் சுரண்டல் சித்தாந்தக் கொள்கைகளினால் — ஈழத் தமிழ்மக்கள் உலகின் பல பாகங்களுக்கும் புகலிடம்தேடி — நாடுமாறிகளாய் ஆதிமனித சமுதாயமொத்த நாடோடிகளாய் அலைந்த, அலைகின்ற பொழுதில் — மொழிமீது கொண்ட பற்றாலும் பிறந்தமண்மேல் கொண்ட பற்றாலும் — புத்திஜீவிகளாலும், இலக்கிய ஆர்வலர்களாலும் — குறிப்பாக ஜேர்மனியில் நகரத்துக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற எண்ணிக்கையில் தமிழ்ச்சஞ்சிகைகள் புற்றீசல்களாய் கையெழுத்தில் உதயமாகின. பின் தட்டெழுத்துக்குத்தாவி, கொம்பியூட்டர் மூலம் கம்பீரமாகப் பொலிவுபெற்றவேளையில் — உழைப்பிற்கு ஏற்ற பரவலின்மையாலும், வாசகர்களின் போதிய கவனத்தைத் தன்னகத்தே தக்கவைத்துக்கொள்ளத் தவறியதாலும், ஆக்கதாரர்களின் ஆதரவு போதாமையினாலும் பொருளாதார நெருக்கடியினாலும் சஞ்சிகை ஆரம்பித்தபோது இருந்த ஆர்வமும் உற்சாகமும் தளர்ந்து சலிப்பு ஏற்பட்டதாலும் — அல்லது இவற்றுள் ஏதோ ஒன்றின் நிமித்தம் பல சஞ்சிகைகள் இடைநடுவில் சொல்லிக்கொள்ளாமலேயே அஸ்தமனமாகி விட்டபோதும் தொடர்ந்தும் வெளிவரும் சஞ்சிகைகளுள் பூவரசு சஞ்சிகையானது தொடர்ந்தும் தனது உறுதியான வளர்ச்சிப்போக்கில் எதிர்ப்படும் தடைகளையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

இந்துமகேஷ் என்ற ஈழத்து இலக்கியப்பரப்பில் புதிய வீச்சை அகலப்பதித்த தரமான உரத்தில், பூவரசானது, கையெழுத்தில் துளிர்த்தபொழுதே — அதன் பக்கங்களில் வித்தியாசமான ஆக்கங்கள் வாசகரைத் தன்வசப்படுத்தியதை உணர முடிந்தது.

'உலகமே நம் இல்லம் உள்ளமெல்லாம் நம்சொந்தம்' என்ற தங்கமுலாமிட்டு, 'படைப்பவர் ஆக்கம் தருக படிப்பவர் ஊக்கம் தருக' என்று வாசகனைத் தேடிவந்த பூவரசின் பணிவும் — வாசகர் ஒருவரின் கைவண்ணத்தில் பிறந்த சின்னத்தை தன்னுடன் வரித்துக்கொண்ட பாங்கும்கூட அதன் வளர்ச்சிக்கு ஒரு காரணமோ



என்றுகூட எண்ணத்தோன்றுகிறது.

பூவரசு நிழலினிலே புதுப்பாட்டுப் பாடவென வரிந்து நிற்கும் புதுப்புதுக் கவிஞர்களின் அறிமுகங்கள் — பயணக்கட்டுரைக்கு மணியன் போன்ற இந்திய எழுத்தாளர்களுக்கும்மேலே திறமையாக "தமிழ்நாட்டைச் சுற்றிய..." வீ.ஆர்.வரதராஜாவை இனம்காட்டியது, ஆராய்ச்சிக்கட்டுரைகளுக்கு சான்றுகளுடன் கமலநாதன் இருக்கின்றார் எனப் பறைசாற்றியது — சிறுகதைகளுக்கு ஒன்றல்ல பல எழுத்தாளர்கள் உள்ளனர் என மாதாந்தம் நிரூபித்தது போன்ற பணிகளை 'பூவரசு'நடுநிலையில் நின்று — இங்கே நடுநிலை என்பது விவாதத்திற்குரியது எனினும் — இன்றுவரை வளர்ச்சி ஒன்றையே நோக்கமாகக்கொண்டு தளர்ச்சி இன்றிச் செயற்படும் பூவரசின் ஐந்தாண்டு காலப்பகுதியை எழுதிக்கொண்டே போகலாம்.

பூவரசு ஆசிரியர் நான்காவது ஆண்டு மலரில் (1995) கூறியதுபோல் 'பழுத்த இலைகள் உதிர்வதும் புதிய தளிர்கள் எழுவதும் இயற்கையோடிணைந்த காரியங்கள்தாம்' என்றாலும் பழுத்த இலைகளின் தாக்கம் புதிய தளிர்களுக்கு இல்லாமல்கூடப் போய்விடுகின்றன உதாரணமாக நாடுகளை நாமறிவோம், நாங்கள் ஒரு நாலுபேர், சந்திப்போம் சிந்திப்போம் (ஒருதலைப்பில் பல கருத்துக்கள்) போன்ற அம்சங்கள் சருகுகளாக உதிர்ந்து போனதும் விழுபவைகளும் அவைகள்தாம் எழுபவைகளும் அவைகள்தாம் என நினைக்க முடியவில்லை.

இலக்கியப் பணியுடன் பூவரசானது விழாக்கள் மூலம் கலைகளையும் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் பணியானது பாராட்டுதல்களுக்கும் வியப்புக்கும் உரியதாயினும் பூவரசு சில சமயம் தனது தகுதிக்கு மீறி ஆசைப்பட்டு சிலவற்றை செயலாக்காமல் விட்டுவிடுகிறதோ என்றும் கருத இடமுண்டுஉதாரணமாக பூவரசு வாசகர் வட்டம் பற்றிய தொகுப்பு அறிவிக்கப்பட்டு பல மாதமாகியும் வெளிவரவில்லை.

முன்பு ஒன்று அரைகுறையாக வந்ததோடு சரி.

"நீ பிறந்ததை நான் காணவில்லை. ஆனால் எல்லோர் கைகளிலும் தவழ்ந்ததைக் கண்டேன்" என ஒருவர் —

"அன்னை தமிழுக்கு அர்ச்சனை மலரான என் இனிய பூவரசே!" என உரிமை கொண்டாடும் ஒருவர்.

"நீயோ என் வாழ்க்கை ஓவியத்தின் வண்ணக் காவியம்!" என இன்னுமொருவர் எனப் பல வாசகர்களின் அபரிதமான நேசத்திற்கும் வரவேற்புக்கும் உரியதான பூவரசு, வாசகர் வட்டத் தொகுப்பை வெளியிடாமல் அறிவித்தலோடு ஏமாற்றியது என்ன நியாயம்?

வெளியிடாமல் அறிவித்தலோடு ஏமாற்றியது என்ன நியாயம்?
இவ்வாறு பல வாசகர்களைக்கவர்ந்த பூவரசு சஞ்சிகையின் ஆசிரியரின் திறமையை இங்கே பாராட்டுவது அர்த்தமற்றது. ஏனெனில் ஈழத்துப் பத்திரிகைகளிலும் வானொலியிலும் முத்திரை பதித்ததுடன் தாயகத்தில் சஞ்சிகை ஒன்றை நடாத்தியவருக்கு இதென்ன பெரிய காரியம்?
கடந்தகாலப் பகுதியில் வியாபாரரீதியில் பூவரசிற்கு என்ன செய்தார் என்பதுதான் என் கேள்வி. பூவரசிற்கு வியாபாரப்பரவல் தேவையற்றது என்பதுதான் இவரது எண்ணமா?

> *"யாருக்காகவும் யாரும் காத்துக்கொண்டிருக்க நேரமில்லை. வாழ்க்கைப் பயணத்தில் நாங்கள் ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும். நமக்கு முன்னாலும் பின்னாலும் பலர் ஓடிக்கொண்டிருக்கும்போது பாதையின் குறுக்கேநின்று பார்த்துக்கொண்டிருக்க நமக்கு அவகாசமில்லை... — பூவரசு ஆசிரியர்.(தலையங்கத்தில்)*

— பூவரசுக்கு முன்னே பாரிஸ்பத்திரிகைகள் ஓடும்போது பூவரசும் ஓடவேண்டும். தகுதி பூவரசுக்கு நிறைய உண்டு. ஓடித்தானாகவேண்டும். ஓடுவோம்.

-இராஜன் முருகவேல்.

(4 ஆண்டுகளுக்கு முன்பு 'பூவரசுபற்றி நான்...' என்ற தலைப்பில் வாசகரிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகளில் ஒன்று மேலே பிரசுரமாகியுள்ளது. 4 ஆண்டுகளுக்கு முன்பு பூவரசுபற்றிய வாசகர்களின் கணிப்புக்காக நடாத்தப்பட்ட போட்டிகளில் 4 கட்டுரைகள் தெரிவாகிப் பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன.)



பூவரசு தனது எட்டாவது ஆண்டை நிறைவு செய்யும் இப்போதைய நிலையில் பூவரசு பற்றி படைப்பாளர்கள், வாசகர்களாகிய உங்களது கணிப்பீடு என்ன?

'பூவரசும் நானும்'

இந்தத் தலைப்பில் பூவரசில் 3 பக்கங்களுக்குள் அடங்கத்தக்கதாக நீங்கள் கட்டுரை வரையவேண்டும். சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுகள் உண்டு.

**(போட்டி முடிவு திகதி: 15.12.1998)**

## குந்த இடம்கொடுத்ததனால்...

வாள்கொண்டு வேல்கொண்டு
தனைத்தான் ஆண்டபோது
தமிழ் மண்ணில்
தேனாறு பாய்ந்ததன்று.


கார்கொண்ட மேகத்தின் கனிவுண்டு
காலம் பொய்த்தாலும்
கல்லணையின் நீர்கொண்டு
நல்நெல் விளைவித்தனரன்று

வேருண்ட நீருக்கு
வெல்லஞ் சேர்த்து
தாறுவந்து தருகின்ற
தென்பனைகள் பலவுண்டு

தேனென்று தெரியாமல் ஏமாந்து
தென்னங் கள்ளுண்டு
மயங்கும் மதுவண்டு
கடலுண்டு கரைவந்து
இளந்தென்னை மரமேறி
இளநீரும் பறிப்பதுண்டு
தாருண்ட நீர்கொண்டு
தானாக வளர்கின்ற
ஆறுண்டு அரசுண்டு
ஆளுண்டு படையுண்டு
நானூறுவருடங்கள்
நாமதை மறந்தோமதனால்
ஏனென்று கேட்க
எவருண்டு எமக்கின்று
வந்தாரை வரவேற்று
குந்த இடம்கொடுத்ததனால்
வந்தது கேடு!

**ப. இராஜகாந்தன்.**

# கண்ணற்ற காதலன்



கருணைகொண்டவள்
கனிவு நிறைந்தவள்
பாதங்கள் பூமியில்
பதிய மறுக்கும்
சக்கரம் பூட்டிப்
பறந்துதிரியும்
இன்று பாரீஸ்
நாளை பீக்கிங்
பாசைகள் பல
பேசும் பெண்ணவள்.

அறிந்து கொண்டது
ஆறு வருடங்களின்
முன்னம், அப்போது
நான் ஆழ் இருளில்.
பல தடவைகள்
பறந்து போனோம்
புதுமைகள் வடிவில்
மீளவும் கண்டோம்
மீண்டும் இணைந்ததில்
மிகையிலா இன்பம்.
இனிமேல் பிரிவிலை
என்பது திண்ணம்.

காதல் பற்றிக்
கதைத்தது அறியேன்
ஆனால் என்றோ
புரிந்து கொண்டேன்.
பிரிவுத் துயரைத்
தாங்க மறுத்தேன்,
அவளைக் கனவில்
பகலிலும் கண்டேன்.

உண்மையை ஒளியில்
தேடியபோது
எனது மடமை
இருளிலும் தெரிந்தது
அவளின் அருமையை
அறிந்து கொண்டேன்
ஆண்டவன் தயவில்
ஆவதை விளந்தேன்

கன்னியே!
கண்ணற்ற இந்தக்
கவ்வனை ஒருதரம்
கனிந்து கொண்டு
காதலன் என்கரமதை
ஏற்றுக் கொள்வாய்.



http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) 911/09
பொள்ளாச்சி நசன்



பிரேமன் சிவசக்திக்குமரன் ஆலயம்
வருடாந்தத் திருவிழா '98.



எழுத்தாளர் பொ.கருணாஹரமூர்த்தி அவர்களின் நூல் வெளியீடு.

# பூவரசு

***POOVARASU.***

TAMILISCHE KULTUR MAGAZIN



பரத நாட்டிய அரங்கேற்றம்.
செல்வி.ஆன்வினோலினி நடேசன்.